# தத்துவபோதினி.

பு. ௨.] சென்னைப்பட்டணம் ௧௮௬௫ௗ அக்டோபர்மீ ௭௨. [இல. ௬.

ஏகமேவாத்விதீயம், ஸத்யம் ஜ்ஞாநமநந்தம் ப்ரஹ்ம, ஶாந்திஶ்ஶ்ரீஸ்ஸத்ருதம், தமேகா
யத்ரூத்வாஸம் தத்ரவைநாயம், யஶ்சித்ப்ராப்தாஷேஷவஞ்சி, சமே
தமேதத்வேவமேவாபியஞ்சி.

ஸத்யமேவஜயதே நாந்ருதம்.

## அட்டவணை.

### விஷயங்கள்.


| | பக்கம். | | பக்கம். |
|---|---|---|---|
| ௧. கடவுள்துதி | ௧௨௧ | ௮. உபநிஷத்து | ௧௩௪ |
| ௨. விளம்பரங்கள் | ௧௨௨ | ௯. அர்த்தசாஸ்திரம் | ௧௩௫ |
| ௩. தத்துவபோதினி | ௧௨௩ | ௧௦. நிருபங்கள் | ௧௩௭ |
| ௪. விவாகம் | ௧௨௪ | ௧௧. மநுநூல் | ௧௪௦ |
| ௫. விண்ணப்பம | ௧௨௯ | ௧௨. விவேகவிளக்கம் | ௧௪௫ |
| ௬. ருக்குவேதசம்ஹிதை | ௧௩௧ | ௧௩. புஸ்தகவிளம்பரம் | ௧௪௮ |
| ௭. பகவத்கீதை | ௧௩௩ | ௧௪. சந்தாதாரர்அட்டவணை | ௧௪௮ |


சத்தியமே சக்தி—தத்துவமே சித்தி.

### கடவுள்துதி.

நீலாம்புரிராகம் - அடதாளசாப்பு.

பல்லவி.

கோனேகுணநிதியே-நீகைவிடில்
காணேனேகதி யொன்றும்.

அநுபல்லவி.

தேனேகேட்டாவமுதே- பாலேபசியாமருந்தே-(கோனே.)

சரணங்கள்.

௧. நன்மைக்கேநீயிந்தமனம்-நலமேநாடாமல் நின்று,
நஞ்சாம்வழியைத்தேடி-நாசம்விளைக்கின்றதே-(கோனே.)

உ. நீரிற்குமுழிபோன்ற-நிலையற்ற இம்மைச்சுக
நிழலையேதாவிநின்று-நின்றன்பதமறந்தேன்-(கோனே.)

ரு. நீதியேநிறைகடலே-நீசனுமென்செயலை.
நீக்கிமிகவன்புடன்-நித்தியசுகமளிப்பாய்-(கோனே.)

## விளம்பரம்.

இந்தச் சென்னைத் தத்துவபோதினியை வாங்க மனமுடையவர்கள் மயிலாப்பூரில் தத்துவபோதினி அச்சுக்கூடத்தில் வேதஸமாஜத்தின் காரியதர்சியாகிய பி. சுப்பராயலு செட்டியார், பி. ஏ. பி. எல். அவர்களுக்கு எழுத்துமூலமாய்த் தெரிவித்துக்கொள்ளவேண்டியது.

## இதற்குச் சந்தாவிவரம்.

| | |
|---|---|
| சென்னைப்பட்டணத்திலுள்ளவர்கள் வருஷம் ஒன்றுக்கு ரூபாய்...................... | க - அ - 0 |
| அதற்கு வெளியிலுள்ளவர் தபால் கூலியுடன் சேர்த்து வருஷம் ஒன்றுக்கு ரூபாய். | உ - 0 - 0 |
| பத்துப்பிரதிகளுக்கு அதிகமாய் வாங்கும் வெளியிலுள்ளவர்கள் தபால்கூலியுடன்சேர்த்து வருஷம் ஒன்றுக்கு ரூபாய்.................... | க - ௧௨ - 0 |

இதற்குச் சந்தாதார்கள்தங்கள்சந்தாக்களை யந்தந்த வருஷத்தில் முன்பணமாய்க் கட்டவேண்டியது. மேமாசத்துக்கு மேமாசம் இதற்கு வருஷமாய்க்கொள்ளவேண்டியது. வருஷம் நடுவில் வாங்கத் தொடங்குவோர் வருஷத்திய சந்தாவும் கொடுக்கவேண்டும்.

வெளியிலிருந்துசந்தா அனுப்பவேண்டியவர்கள் தபால் முத்திரைகளனுப்பலாம். ஆனால், அப்படி யனுப்பப்படும் முத்திரைகளை மாற்றுவதர்க்காக,ரூபாய் ஒன்றுக்கு- ஒரு அணு வீதம் வட்டம்சேர்த்து அனுப்பவேண்டியது.

இந்தப் பத்திரிகையின் சந்தாதாரர்களும், பங்குக்காரர்களும், இடம் மாரும்போது அந்தவிவரத்தைத் தயைசெய்து காரியதர்சிக்குத் தெரிவிக்கவேண்டியது.

## புஸ்தகவிளம்பரம்.

| | |
|---|---|
| கிரந்தத்திலும், தமிழிலும் இயற்றப்பட்டபாலவியாகரணம் | 0 - ச - 0 |
| வேதஸமாஜத்தார் முதல் விண்ணப்பம் விக்கிரஹ ஆராதனத்தைக்குறித்தது நன்ருய்பயிண்டுசெய்தது,............ | 0 - அ - 0 |
| ஷை மட்டபயிண்டுள்ளது... .. | 0 - எ - 0 |
| க௮௬௬௵ மேமாசம் முதல் க௮௬௫௵ ஏப்பிரல்மீ௳ வரையிலுள்ள தத்துவபோதினி பயிண்டுசெய்தது...... | ரு - 0 - 0 |

வெளியிலுள்ளவர்கள் புஸ்தகம் ஒன்றுக்கு ஒருஅணுவீதம் தபால்கூலி சேர்த்தனுப்பவேண்டியது.

## நிருபக்காரருக்கு விளம்பரம்.

இந்தப்பத்திரிகையில் பிரசுரமாகும்படி தயைசெய்து நிருபமெழுதியனுப்பும் கனவான்கள், அதுபிரசுரமாக வேண்டியதற்கு முன்மாதமே-௨0௳ க்குள்ளாக அந்த நிருபங்கள் எங்களிடம் சேரும்படி அனுப்புவார்களாகில் வெகு உபகாரமாக விருக்கும்.

எங்கள்கொள்கைகளை ஆக்ஷேபித்தெழுதினால் நாங்கள் பிரசுரம்செய்யமாட்டோமென்கிற கருத்தினாலே நிருபமெழுத மனமுடைய பலர் எழுதாமலிருப்பதாய்

நாங்கள் கேள்விப்படுகிறோம். உண்மை வெளியாகவேண்டியதே எங்கள் கருத்தாகையால், எங்கள் சகூதிகளை யபேக்ஷித்தெழுதப்படும் நிருபங்களை நாங்களிதில் பிரசுரஞ்செய்வது மாத்திரமேயன்றி, பழுதானவையாய்த் தோன்றும் ஆக்ஷேபங்களுக்கு எங்களாலியந்தவரையில் சமாதானம் சொல்லவும் சரியான ஆக்ஷேபங்களை ஒத்துக்கொள்ளவும் சித்தமாயிருக்கிறோம்.

விஷயங்களின் மேலுள்ள குணதோஷங்களை யெவ்வளவெடுத்துச் சொன்னாலும் எங்களுக்குச் சம்மதமேயாகிலும், வியக்தி தூஷணைங்களை யடங்கிய நிருபங்களை இதில் பிரசுரப்படுத்த இயலாதாகையால் அதற்காக மன்னிக்கக்கோருகிறோம்.

கடைசியாக உண்மைவெளியாகி நன்மைபரவவேண்டுமென நாங்கள்முயலுகிறவாறே நிருபக்காரரும் பரிசுத்த சிந்தையுடன் தங்கள் கருத்துகளை வெளியிடுவார்களென்று நம்புகிறோம்.

---

## தத்துவபோதினி.

**ஸோதரர்களே** இடையில் நேரிட்ட ஆவசியக விஷயங்களைப்பற்றி, முதலில் தொட்ட விஷயத்துக்குத் தடையுண்டானபோதிலும், இப்போதும்விஷயாந்தரங்களைக்குறித்துப் பிரஸ்தாபிக்க வேண்டியிருந்தபோதிலும், தொட்டவிஷயம் மனதினின்று நழுவாதநிமித்தம், இப்போது. கொஞ்சம் சூசிப்பிக்கிறோம்.

ஞானம் சம்பாதிப்பதில் துரபிமானத்தைவிட்டு விசாரம் செய்யவேண்டுமென்றும், அதற்குப்பாஷையின்விருத்தியை திருஷ்டாந்தமாயும் உரைத்தோமல்லவா? பாஷை ஞான சம்பாதனத்துக்குச் சாதனமாகுமேயன்றி, அதுவேசாத்தியமென்று நினைக்கக் கூடாதல்லவா. இப்பாஷையின் சகாயத்தால் அடையும் ஞானமும், சாதனமேயன்றி, சாத்தியமல்ல. சாத்தியந்தானெதுவெனில் இம்மைமறுமைச்சுகங்களேயாம். மறுமைச்சுகங்களைப் பெரும்பாலும் கடவுளின்றபோது நியமங்களாமல் அடையக் கூடுமாகிலும், இம்மைச்சுகங்களிலொன்றும் சாங்கேதிக நியமங்களின்சகாயமின்றிக்கைகூடி வராது. இந்தசங்கேதங்களில் ஆவசியகமானவை சிலவும் அநாவசியகமானவை சிலவுமாயிருப்பதுமன்றி, பாதகமானவையும் சிலவிருக்கும். ஆகையால் நாம் இம்மைச்சுகங்களை யடைய விரும்புவோமாகில், ஆவசியகமான வேற்பாடுகளினின்றுதவறாமலிருப்பதும்; கேவலம்அநாவசியகமானவற்றின் விஷயத்தில் உதாசீனமாயிருப்பதும்; பாதகமானவற்றைக் கடிந்தொழிப்பதும் அத்தியாவசியகமானதென்று தானேவிளங்கும்.

இந்தச் சங்கேதங்களின்சுவரூபங்களை விசாரிப்பதில்துரபிமானத்தைக்கைவிடாவிடில் வந்துறத்தக்க தீமைகளைச் சற்றுமனதிற் கொள்ளவேண்டும். விவாஹம், பதார்த்த சுவத்துவம், வியாபாரவிபஜனம், துரைத்தனம், குடித்தனம், ஆசாரியசிஷ்யத்துவம், முதலியசங்கேதங்கள் ஆவசியகமானவையாம். இவ்வேற்பாடுகளின்றி மனிதர் நீடுவாழமாட்டாமை பற்றி ஆதிகாலத்திலேயே உண்டாகிவிடுகின்றமையால், இக்காலத்திலுள்ளவர் அவைபௌருஷேயமல்லவென்றும், கடவுள் செய்த வியவஸ்தைகளென்றும், மதிக்கும்படியாயும், அவ்விதக்கொள்கைக்காதாரமான நூல்களேற்பட்டும், இருக்கிறது. அவற்றைத்தவறக் கூடாதென்கிற ஞானம் ஜனிக்கவேண்டியது பிரதானமேயன்றி, அந்தஞானம் பிரமத்தினாலுண்டானாலும் பிரமையினாலுண்டானாலும் பாதகமில்லையாகையாலும்; ஆதியில் கல்விப்பயிற்சியும் புத்திவிகாசமும் விசேஷமாயில்லாதகாலத்தில் யதார்த்தசுவரூபநிரூபணம்மனதிற் செட்டமாட்டாதாகையாலும்; பகவந்நியமனமெனும்பக்ஷத்தில் சகலரும் பயந்து தடைக்குட்படுவார்களாகையாலும்; ஆதியில் தர்மசாஸ்திரங்களெழுதினவர்களெல்லாம், அவற்றைக் கடவுள் செய்த வியவஸ்தைகளென்றும், அவ்வியவஸ்தைகளைக் கடப்போருக்கு இன்னின்னபாவமும் சிக்ஷையும் கிடைக்குமென்றும் விதித்திருப்பார்கள். இவ்வுண்மை

யை நிரூபித்துக் காட்ட ஒரு திருஷ்டாந்
தம் கூறுகிறோம். பாரதம் ஆதிபர்வத்தி
ல் கஉ௨-வது அத்தியாயத்தில்விவாஹம்
ஆதுனிகவியவஸ்தை(புதுவேற்பாடு) யெ
ன்றுசொல்லி யிருக்கும் உபாக்கியானத்
தைக்கேட்போம். பாண்டுதன்மனைவியாகி
ய குந்தியைநோக்கி. "இனி தர்மக்ஞரும்
" மஹாத்மாக்களுமாகிய ருஷிகள்கண்ட
" அனுதியான இந்த தர்மசூக்ஷ்மத்தைச்
" சொல்லுகிறேன் கேட்பாயாக. பூர்வத்
" தில் ஸ்திரீகள் வஸ்திரமே தரிக்காமல்
" இஷ்டமானபடி சஞ்சரித்துக் கொண்
" டும்சுவதந்திரராயும்இருந்தனரல்லவா?
" ஒமனோக்கியமான நகையுடையவளே!
" இவ்வாறு யவ்வனத்தால் கணவர் நி
" மித்தம் மனம் போனபடி திரிந்து
" கொண்டிருந்த ஸ்திரீகளுக்கு அக்கா
" லத்தில் அதுவே தர்மமாயிருந்தது.
" இந்தப் பழைய தர்மத்தையே மிருக
" ங்கள் இப்போதும் காமக் கிரோதங்
" களின்றி அனுஷ்டித்து வருகின்றன.
" பிரமாணுதாரத்தை யுடைய இந்ததர்ம
" மானதுமஹார்ஷிகளாலே பூஜிக்கப்படு
" கிறது. இப்போதும் உத்தரகுருதேச
" த்தில் இப்படியே நடந்துவருகிறது.
" ஸ்திரீகளுக்கு அனுக்கிரக கரமாகிய அ
" ந்ததர்மம்அனுதியாய்வழங்கிவருகிறது.
" இவ்வுலகத்திலிப்போதுள்ள வேற்பாடு
" யாரால் எந்தநிமித்தம் கோபத்துடன்
" செய்யப்பட்டதோ அதைவிரித்துரை
" க்கிறேன் கேள். உத்தாலகரென்று ஒ
" ருமஹர்ஷி யிருந்தாரென நமக்குக்கே
" ள்வி. அவருக்கு சுவேதகேதுவென ஒரு
" பெயர்பெற்ற புத்திரனிருந்தார். அந்த
" சுவேதகேதுவினால் இந்ததர்மயுக்தமா
" ன ஏற்பாடுசெய்யப்பட்டது. முற்கா
" ல் சுவேதகேதுவின் தாயை அவர்பிதா
" வின் முன்னிலையில் ஒருபிராம்மணன்
" கைப்பற்றி 'போவோம்வா' என்றழை
" த்தார். இவ்வாறுஅந்தபிராம்மணன்தா
" யை பலவந்தமாய் இழுக்கக்கண்டுபொ
" றுக்கமாட்டாமல் சுவேதகேது கோபித்
" தார். அப்படிக்கோபித்ததன்குமாரனை
" நோக்கி உத்தாலகர் 'ஒருழந்தாய்கோபி
" 'க்காதே, இந்ததர்மம்.அனுதியானது,பூ
" 'லோகத்தில்சகலவர்ணஸ்திரீகளும்அவ
" 'ர்பிரஜைகளும் வஸ்திரமற்றவராய்ப்ப
" 'சுக்களைப்போலவே திரிந்துகொண்டிரு
" 'ந்தனர்' என்றார். ருஷிபுத்திரராகிய சு
" வேதகேது அந்ததர்மத்தைச சஹிக்கவி
" ல்லை. அவர் இம்மரியாதையை இவ்வு
" லகத்தில் மனுஷியஸ்திரீபுருஷர் விஷய
" த்தில் செய்தாரேயன்றி மற்றஜந்துக்க
" ள்விஷயத்திலல்ல. அதுமுதலிவ்வேற்
" பாடுண்டானதாகஎங்கட்குக்கேள்வி. க
" ணவனைப்பிரிந்து வியபசரிப்பவர்களுக்
" குபுரூணஹத்திக்குச் சமமானவும்கோ
" ரமானவும் பாபமுண்டாகுமென்றும்;
" யுவதியாயும் நியதையாயுமுள்ள பாரி
" யைப்பிரிந்துவியபசரிக்கும் புருஷனுக்
" கும் இந்தப்பாப முண்டென்றும் அவர்
" சபித்தார்." என்றுசொல்லியிருக்கிறார்.
இந்த உபாக்கியானத்தினால் ஆதியில் வி
வாகமென்கிற வியவஸ்தையேயின்றி அ
னைவரும் மிருகப்பிராயமாய்த் திரிந்து
கொண்டிருந்தார்க ளென்றும்; பிறகு வி
வாகமென்கிற ஒருவித ஏற்பாடுண்டான
போதிலும், இப்போதுமலையாளத்திலுள்
ளவாறு யதேச்சையான சஞ்சாரம் நடந்
துகொண்டிருந்ததென்றும்; அவ்விதமரி
யாதை சுவேதகேதுகாலம் வரையில் நட
ந்துவந்ததென்றும்; அவர்காலம் முதல்
பிரகிருதத்திலுள்ள ஏற்பாடுநடந்துவருகி
றதென்றும்; ஸ்பஷ்டமாய் விளங்குகிற
தல்லவா. இதைப்பற்றிய மற்றபாகங்க
ளைக்குறித்து விசாரிக்கஇன்றுஅவகாசமி
ல்லையாகையால், அதைவருகிறபத்திரிகை
யில் தொடர்ந்து சர்ச்சிப்போம்.

---

## விவாகம்

இந்தவிஷயத்தைக்குறித்துத் தனியா
ய் ஒருபுஸ்தகமெழுதக் கருதியிருக்கின்ற
மையால், இதைத் தத்துவபோதினி யில்
விசாரிப்பது அனவசியகமென்று நிறுத்
தலாயிற்று.

---

## மெய்யேவெல்லும் பொய்யல்ல.

சகலவித உண்மையான இம்மைமறு
மைச் சுகங்களைத்தருவது மெய்யேயன்றி

பொய்யல்லவென்பதைச் சகலதேசத்தாரும் ஒப்பிஅனுஷ்டிக்கையில் பிரகிருதத்தில் நமதுநாட்டை யலங்கரிக்கவந்தருளிய சிலபண்டிதர்கள்மாத்திரம்வேறு விதக்கொள்கையை அவலம்பிப்பதற்குக் காரணமின்னதென்று அவர்களுக்கே நன்றாய்த்தெரியும். சிலகாலமாய் நம்மவராசாரத்தில்வந்தேறிய பழுதுகளிற்சில எங்களுக்குருசிக்காமற் போனதுமாத்திரமேயன்றி, மானிடத்தன்மைக் கடுக்காதனவாயும் விளங்கியபடியால், எங்கள்வரையி லவற்றினின்றொழிந்தோம். நம்மவரனைவரும் இசசீரானவழியில் செல்லவேண்டுமென்பது எங்களாந்தரிய மானகோரிக்கையாகிலும், பலஹேதுக்களைப்பற்றி நம்மவரை வலிய எதிர்த்துப்போராடமனமின்றி யிருந்தோம். இவ்வாறிருந்ததற்குக் காரணமென்னவெனில் அவற்றில் முக்கியமான சிலவற்றை யிவ்விடத்துரைக்கிறோம்.

க-வது. நம்மவரில் பிறர்மனம்நோவும்படியான செய்கையில் நாங்கள் வலியப்பிரவர்த்திக்கிறதில்லையென்பது எங்கள் பிரதிக்கினைகளிலொன்றாயிருக்கிறது. சாதாரணமானவர்கள் விஷயத்திலேயே இவ்வாறாகில், எங்கள்வந்தனத்துக்குப் பாத்திரராகிய பண்டிதர்களுக்கு மனவருத்தமுண்டாக்கத்துணிவோமோ.

உ-வது. எங்கள்கொள்கைகளுக்குள் விக்கிரஹ ஆராதனம் கூடாதென்பதும், பெண்களுக்குப் புனர்விவாகம் செய்வது சாஸ்திரீயமென்பதும், அந்தந்தவர்ணங்களின் அவாந்தரபேதங்களை நீக்கவேண்டுமென்பதும்,நம்மகர்மங்களில் பலசுவரூபஹானியானவையென்பதும் ஆகஇந்நான்கும் முதலெடுப்பில் நம்மவர் மனதுக்கு ஒப்பாதகாரியங்களாகத் தோன்றும். இவற்றின் சுவரூபமெப்படி யிருந்தபோதிலும், ஜனித்தது முதல் ஐம்பது அறுவது வருஷகாலம் அனுஷ்டித்துவைரமேறியிருக்கும் அபிப்பிராயங்களைமாற்ற நாங்கள்முயல்வோமாகில் எங்களிலும்பித்தரைக்காண்பதுவெகுஅருமையாய்முடியும்.

ங-வது. ஒருவேளை நம்மபண்டிதர்கள் யுக்தாயுக்தங்களையோசித்து, துரபிமானமின்றி உண்மையை அனுசரிக்க மனமுள்ளவர்களாயிருக்கினும், அவர்களந்தஸ்தின் கொடுமையால், அவ்வாறுசெய்ய அசக்தராயிருக்கின்றனர். பிராம்மணரில்சிலர்வியவசாயம்,உத்தியோகம்,முதலியகவுரவமான ஜீவனோபாயங்களை யனுசரித்தபோதிலும்; பலர், முக்கியமாய் ஆசாரியபுருஷரென்று பெயரிட்டுக்கொண்டிருப்பவர் சிஷியார்ஜனையென்றும், ஞானோபதேசமென்றும், இன்னும்பலப்பிரதிநாமங்களையுடைய பிச்சையையே ஜீவனோபாயமாய் அவலம்பித்துவருகின்றனர். இத்தன்மையானசோம்பேறித்தனத்தில்பழகியவர்கள்,எங்கள்கொள்கைகளை ஒத்துக்கொண்டுஅனுஷ்டிப்பார்களாகில்,எந்தநிமித்தமாக ஜனங்கள்பிரமித்து அவர்கட்குப் பிச்சையளிக்கிறார்களோ, அதுநீங்கிவிடுமாகையால், ஐம்பதறுவதுவயதானபிறகு அவர்கள் மார்க்காந்தரங்களைத் தேடி உழைக்கவேண்டியதாய் நேரிடுமல்லவா. இவ்வளவு சாத்தியமென்று நாங்கள் மலைப்போமோ?

ச-வது. விஷயத்தில் பலமிருந்தால் வாதிகள் சிறப்படைவது சாத்தியம். வாதிப்பவர் எவ்வளவு சமர்த்தராகிலும், உப்புக்குதவாத கக்ஷியை அவர்கள் கையில்கொடுத்தால், அவர்கள்சற்றுநேரம்வேடிக்கையாய்ப்பேசினபோதிலும் முடிவில் பயனொன்றுமிராதல்லவா. சதர்கோட்டில் முதல் தரம்பாரிஷ்டர்களும் தோற்றதற்கும், பழயவக்கில்களும் ஜயித்ததற்கும், கக்ஷியின் சுவரூபமே காரணமென்று அனைவரும் ஒப்புகொள்வார்களாகையால், இவ்விஷயத்தை நிரூபிக்கவேண்டியதாவசியகமன்று. அடியோடு ஆதாரமற்று,யுக்திப்பிரமாணங்களனைத்தாலும் நிந்திக்கப்பட்டிருக்கிற கக்ஷியைக்கொண்டு எத்தன்மையான பண்டிதர் தான்பிரதிஷ்டையக்கூடும். இவ்வுண்மையெல்லாம்நன்றாயறிந்து, வெகுநாளாய் வந்தவழக்கத்தைக்கெடுக்கநாங்கள் குடிக்குக்கோடாலியாக வந்ததாய் மதித்துவயிறெரிந்து, உள்ளூறச்சபித்துக்கொண்டிருக்கும்பண்டிதர்களைவலிய போருக்கிழுப்போமாகில் அவர்கள் கக்ஷிதவுர்பல்லியத்தை யறிந்த

நாங்கள் அவர்களைமனப்பூர்வமாகப்பரிபவப்படுத்தும் பொருட்டே அவ்வாறுபிரவர்த்தித்ததாய் அயலார் எங்களை நிந்திக்கும்படி யிருக்கலாமாகையால், நாங்களவ்வாறு செய்ய அஞ்சியிருந்தோம், அஞ்சியேயிருக்கிறோம்.

இத்தியாதி அநந்தஹேதுக்களைப் பற்றி நாங்களவர்களுடன் வலிய போருக்குச்செல் லாவிடினும், அவர்களெங்களை வாதுக்கிழுக்கும் போதெல்லாம் பின்னிடையாமல் தெரிந்தவரை வாதித் தோம். ஆகிலும் இனி எழுத்துமூலமாய் எங்கள் சக்திக் கிசைந்தவரை வாதிக்கநாங்கள் சித்தமாயிருக்கினும், வாக்குவாதத்தில் வீணாய்ப் பொழுதுபோக்க எங்கட்குமனதில்லை. இதற்குரிய ஹேதுக்களனைத் தையும் உரைப்பதைவிட, இப் பண்டிதர்களில்ஒருவருடைய சரிதையை விவரிப்பதே உத்தமமென்று நினைக்கிறோம்.

எங்கள் ஸமாஜமேற்பட்டு சிலநாள் கழிந்தமேல், எங்களிலொருவருடன் சில பண்டிதர்களும் இன்னும் சிலபெரியமனிதர்களும் விக்கிரஹஆராதனத்தைக்குறித்துச்சர்ச்சித்துக் கொண்டிருக்கையில், காஞ்சீமண்டலத்தில்வாஸ்தவமாகவேபெயர்பெற்ற ஒருவைஷ்ணவப் பண்டிதசிரேஷ்டர் அவ்விடம்வந்து விவாதவிஷய மென்னவென்று வினவிக்கேட்டபோது, அங்குள்ளபண்டிதர்கள் விக்கிரஹ ஆராதனத்துக்கு வேதத்தில் ஆதார மூண்டாவென்பதுதானென்று விடையுரைத்தனர். அதைச்செவியுற்றுஅப் பண்டிதசிரேஷ்டர் சற்றுயோசித்துவிட்டு, பாஞ்சராத்திரத்தில் ஆதார மிருக்கிறதென்றார். பிறகு எங்கள் காரியதரிசி விசாரவிஷயம் அதுவல்லவென்றும், வேதத்தில்பிரமாணமுண்டா இல்லையாவென்பது மாத்திரந்தானென்றும், விடையுரைத்ததன்மேல்அப்பண்டிதசிரேஷ்டர் வெகுநேரம்யோசித்துவிட்டு வேதத்தில் பிரமாணமில்லையென்றுவாய்விட்டு ஸ்பஷ்டமாயுரைத்தார். பிறகு அவருக்குமுன் இச்செய்திகாஞ்சிபுரம் சேர்ந்து, பலர்அவரைத்தூண்டி வினவத் தொடங்கவே அவ்விதப் பிரஸ்தாபமொன்றும் நடந்ததே யில்லையென்றும், தான்மேற்கூறியவாறு ஒத்துக்கொள்ளவில்லையென்றும் விடையுரைத்தாராம். பின்பு சிலநாள் கழிந்து அவர்எங்கள் காரியதரிசியைக் கண்டபோது "விக்கிரஹ "ஆராதனத்துக்கு வேதத்தில் ஆதாரமு "ண்டாவென்றுகேட்டபோதுஉம்முடை "ய உத்தேசியமின்னதென்றுதெரிந்திரு "ந்தால் அதற்குத் தகுந்தபடிவிடைகூறி "யிருப்பேன்" என்றார். எங்கள்காரியதரிசியோவெளியில்எரிகிறரணத்தில்எண்ணெய்யைக் காச்சியூற்றுவதுதர்மமல்லவென்றுமவுனமாயிருந்தார். மத்தியையில்ஒருக்கால் எங்கள்காரியதரிசிகாஞ்சிபுரத்துக்குச் சென்றிருந்தபோது, இந்தப்பண்டிதசிரேஷ்டருடைய சிஷியர்களும் அவரைஅனுவர்த்தித்தவர்களுமாகியபலபண்டிதர்கள் எங்கள்காரியதரிசியைவாதுக்கிழுத்தபடியால், நாலுமணிகாலம் சாங்கமாய் வாதித்தபிறகு, அப்பண்டிதர்கள் நியமித்துக்கொண்ட மத்தியஸ்தர்களே, அர்ச்சைக்கு ஆதாரமாயுள்ள பிரமாணங்களெல்லாம் வேதவிருத்தமாகையால் செல்லாதென்றும், அதற்கு வேதத்தில் பிரமாணங்கிடைத்தால் மாத்திரம் யோசிக்க வேண்டியதென்றும், அப்படிப்பட்ட பிரமாணமகப்படவில்லை யென்றும் நூற்றைம்பது பேரறிய உரைத்தனர். அதைக் கேட்டபண்டிதர்களி லொருவர்க்கு வேதத்தில்பிரமாண மிருப்பதாயும், அதை மூன்றுதினத்தில் அனுப்புவதாயும்பிரதிக்கியைசெய்து கொண்டவர், பிறகுஒன்றரை வருஷம் கழிந்தும் அதையனுப்பாமற் போனது மாத்திரமேயன்றி, லஜ்ஜையினால் எங்கள் காரியதரிசியைக் காண்பதையேயொழித்தார். இதுநிற்கப் பலர் மேற்படிபண்டிதசிரேஷ்டரிடம் சென்று பிரமாதம்வந்துவிட்டதே, நீர் மௌனமாயிருக்கலாமோமென்று முறையிட்டுக்கொண்டபோதுஅவர் "வாய்ப்பேச்சுகாற்றோடே, வேதசமாஜத்தார்சஞ்சிகையெழுதுவார்களாகில் அதைப்பஞ்சாய்ப்பறக்கச்செய்வேன்போங்கோளெ"ன்று அவர்கட்கெல்லாம்தேற்றரவு சொல்லியனுப்பினார். பின்புகும்பகோணத்திலுள்ள சிலபண்டிதர்கள் சேர்ந்து வேதஸமாஜகண்டன மென்று பெயரிட்டுப் பிரசுரப்படுத்திய ஒருசஞ்சிகையின்சுவ

ரூபத்தைவிளக்கிநாங்களொரு கிரந்தமெ
ழுதின பிறகுபலபண்டிதர்கள் மேற்கூறி
யபண்டித சிரேஷ்டரைவருந்திக் கேட்டு
க்கொண்டபோது:அவர்பாலைக்கண்டதெ
ன்னல் ராமன்பூனையைப்போல் எங்களை
யெதிர்க்கமனமின்றி, எங்களுக்குச்சாஸ்
திரமரியாதைதெரியாதாகையால்எங்களு
டன்வாதிப்பதில் தனக்குகௌரவக் குறை
வென்று விடையுரைத்தார். இந்தப்பண்
டிதசிரேஷ்டரையே சிலசெல்வவான்கள்
பாதித்து எங்கள்கிரந்தத்தைக்கண்டித்து
சித்தாந்த ஸ்தாபனம்செய்யும்படிக்கேட்
டுக்கொண்டபடியால்.அவர்அவர்கள் பே
ச்சைத்தடுக்கமாட்டாமல், அப்படியேதா
ன் விடையெழுதுவதாயும், ஆனல் தன்
பெயரைப் பிரசுரப்படுத்த மனமில்லையா
கையால், வேறெருவர் பெயரால் அதை
அச்சியற்றிவிப்பதாயும் ஒப்புக்கொண்டி
ருக்கிறர். முதலில் சாஸ்திரமரியாதை
தெரியாத எங்களுடன் வாதிப்பதை லா
கவமாய் வெளியிட்ட இப்பண்டிதசிரே
ஷ்டரே விடையெழுதும் சுமைதலைக்கே
றின பிறகு தன்னுடன் ஐந்துநிமிஷம்வா
க்குவாதம் செய்தால் தான் சித்தாந்தத்
தை ஸ்தாபித்து விடுவாரென்றும், நாங்க
ள் எதிர்நிற்சமாட்டாமல் அஞ்சுவதாயும்
கண்டவருட னெல்லாம் சொல்லத் தொ
டங்கினர். ஆதிமுதல் இந்தப்பண்டித சி
ரேஷ்டருடன் நடந்தவரலாறுகளை நன்று
யறிந்திருந்த மற்றெருபண்டிதர் அவரிவ்
வாறு சொல்லியதைக் கேட்டு, "நீர் மு
"ன்னெருக்கால் அர்ச்சைக்கு வேதத்
"தில் ஆதாரமில்லையென்று ஒத்துக் கொ
"ண்ட தில்லையா" என்றுகேட்கஅவரப்ப
டி யொருக்காலும்நடந்ததில்லையென்றுர்.
பிறகு அப்பண்டிதர் ஆச்சரியமடைந்து,
"வேதத்தில் ஆதாரமுண்டா வில்லையா
"வென்று இப்போதுதான் கேட்கிறேன்
"விடையுரைக்கவேண்டுமெ"ன்று கேட்
"க, அந்தப்பண்டிதசிரேஷ்டர் "அதற்
"கு நான்விடையுரைக்க வேண்டியதில்
"லை"யென்றுர். பிறகுபலபண்டிதர்கள்
மூலமாகஅவர், எங்கள் காரியதரிசியை
வாக்குவாதத்துக் கழைத்தார் ஆகிலும்அ
டியில்வரும் ஹேதுக்களால், நாங்களத
ற்கு ஒப்பாமல் எழுத்துமூலமாய்க் கண்
டிக்கும்படிப் பிரார்த்தித்துக்கேட்டுக் கொ
ண்டோம். இனியந்த ஹேதுக்களிற் சிறி
தை யிவ்விடத்திற் சுருக்கமா யுரைக்கி
ன்றோம்.

க-வது. நாங்களிருபதுபேர், பண்டித
ரென்பவரோ இந்நாட்டிலிருப து லக்ஷம்
பேரிருப்பார்கள். தினம்ஒருவர்வீதம்எங்க
ளுடன் வாதத்துக்குவந்து கொண்டிருந்
தால்முடிவுபெறுவதெக்காலம்,எங்கள்தே
கயாத்திரை நிமித்தம் நம்மபண்டிதர்களை
ப்போல எங்களுக்குச் சிரமமின்றிபொரு
ளளிப்போருமில்லைஅவ்வாறுஜீவனம்செ
ய்ய எங்கட்கிஷ்டமுமில்லை. வேலையற்றி
ருந்தபோதிலும், இவ்வாறு வாக்குவாதம்
செய்ய எங்கள் புருஷாயசு போதாது.

உ-வது. ஒருக்கால் நாங்கள் வாதிக்க
ஒப்பினலும், மத்தியஸ்தர் கிடைப்பதசா
த்தியமாயிருக்கிறது. நம்மபண்டிதர்களி
ஷ்டப்படி தலையாட்டாதவர்களுக்குசாஸ்
திரமரியாதை தெரியாதென்கிறர்கள். அ
வர்களுக்கிசைந்த சாஸ்திரமரியாதை யறி
ந்தவர்களுக்கு அர்ச்சையும் அதைச்சேர்
ந்த காரியங்களுமே ஜீவனேபாயமாயிரு
க்கின்றன.

ந-வது. ஒருவேளை யவர்கட்கிசைந்
த மத்தியஸ்தர் கிடைத்து வாதம்நடந்த
போதிலும், தாங்கள் தோற்றலும் ஜயித்
தாலும், நம்மபண்டிதர்கள் ஜயித்த தாக
வே பிரதிஷ்டைகூறிக்கொள்வார்களென்
பதற்கு நாங்கள்வேறுநிதர்சனம் கூறவே
ண்டியதில்லை யல்லவா. மத்தியஸ்தர்மு
ன்னிலையில் அவர்கள் கையொப்பத்தை
வாங்க லாகாதாவெனச் சிலர்கேட்கலாம்.
வாதியின் பலக்குறைவால் வாதம் பலஹீ
னமானதென்று ஊகிக்கக் கூடாதென்று,
மேற்கூறிய பண்டித சிரேஷ்டராலே வப்
பட்ட அவருடைய சிஷியர்களில் சிலரே
முடிவில் சொல்லியெழுந்தனரெனில், இ
தற்கு வேறுதிருஷ்டாந்தமும் ஆவசியக
மாகுமோ. இவ்வாறு வியவஸ்தையின்
றி தடையைக்கடந்துசாரைப்பாம்புபோ
ல் செல்லுவோருடன் வாக்குவாதம் செ
ய்வதில் கண்டசோஷணையும், காலயாப
னமும், திரவியநஷ்டமும், பிரதிஷ்டா

ஹானியுந்தவிர வேறொருபிரயோஜனமும் தென்படவில்லை.

௪-வது. சாமபேதாதிநான்கு உபாயங்களில் வேதம்செய்தவஞ்சனையிலைசாம்மநம்மபண்டிதர்க்குதவாமற் போனபடியாலும், எங்கள் சுவரூபத்துக்கு ஹானியாக தானத்துக்கு நாங்கள்வசப்படமாட்டோமாகையாலும் இங்கிலீஷ் துரைத்தனத்தில் இவர்கள்தண்டம்செல்லாதாகையாலும்,மீந்ததாகியபேதமேகைகண்டமுறையென நம்மபண்டிதர்கள் அவலம்பிக்கின்றனரென்று நாங்கள் லஜ்ஜையைவிட்டுச் சொல்லவேண்டியிருக்கிறது. எங்களுடன் வாதித்துப் பற்கூசியெழுந் திருக்கும்போது,பௌஷ கொவெ.நவ-௲ யெசு(மீகியைச்சோபத்தால் முடி)என்கிறநியாயத்தையும், பேதோபாயத்தையும் உறுதியாய்நம்பி,எங்கள் பெற்றோர் பிறந்தோரிடம்சென்று நாங்கள் பெரியோரையெல்லாம் நாவில் நரம்பின்றிதிட் டினோமென்று கோள்சொல்லி, மனஸ்தாபமுண்டாக்கிக் குடியைக்கெடுக்கத் தலைப்படுகின்றனர். வாக்குவாதத்தை நிவர்த்திப்பதினால் நம்மபண்டிதர்களுக்கு இந்தஉபாயமும் உதவாமற் போகிறதேயென்று பரிதாபப்படுவோர் யாரேனும் ஊரெனில், எங்கட்கு நேரிடத்தக்க அபவாத நிவர்த்திக்கு அவர்களே சந்தோஷப்படுவார்களென்று நம்புகிறோம்.

௫-வது. உலகத்தில் சறுக்கிவிழுந்தவரைபபார்த்து நகைப்பவர் பலரேயன்றி பரிதாபப்படுவோர்சிலரே. உபயகக்ஷிசுவரூபமும் இன்னதென்று அடியோடு தெரியாமல், துரபிமானத்திலே வியாபாரம் செய்துசொண்டிருக்கும் உடலெலாம் சித்திரம்வைத்த வெறும்பெரிய வர்களால் சூழப்பட்டிருக்கும் பண்டிதர்கள், தென்னலிராமன் வழியையனுசரித்து "முச்சதுரத்தின்மேல் நாற்சதுரம், ஐந்திட்டால் "பதினைந்துவரும் இல்லாவிட்டாலைந்து "வரும்"என்பது போன்றஸம்ஸ்கிருதவாக்கியங்களைச் சொல்லி மலைக்கச்செய்வார்களாகிலும், சுற்றிலுமுள்ள மேற்கண்ட பெரியோர் கைதட்டி நகைத்துக்கோஷமிடுவார்களல்லவா.

௬-வது. இப்படிக்கன்றி சஞ்சிகைமூலமாய் வாதம் நடக்கும்பக்ஷத்தில், மேற்கூறிய தீமைகட்கிடமில்லாமலே காரியம் கைக்கூடுமென்பதில் சந்தேக மில்லையே. இம்மார்க்கத்தையனுசரித்தால், அனவஸ்தமாகமேல்மேலும்வளர்ந்துகொண்டிருக்குமென்றும், சித்தாந்தமேற்படாதென்றும் மேற்கண்ட பண்டிதசிரேஷ்டர் உரைக்கிறார். நாங்களும் சத்தியத்துக்குக் கட்டுப் படாதவர்களென்றே ஏற்பட்டபோதிலும், உபயகக்ஷிவாதங்களையும் எழுததில் நோக்குவோர், சுவல்பகாலத்தில் கக்ஷிகளின் தாரதம்மியத்தை யறிந்துகொள்வார்களல்லவா. நாங்களிருபதுபேர் தவிர மற்றோரெல்லாம்சுவபாவத்திலே பண்டிதசிரேஷ்டருடைய கொள்கையில் பாத்தியப்பட்டு, அவர் ஜயத்தில் ஆநந்தப்படுவோராகிலும், கடையில் வந்துவிழுந்தசரக்குகளில் ஜனங்கள் குணமுள்ளவற்றைத் தேடுவார்களென்கிற தைரியத்தினால் நாங்களே சஞ்சிகையெழுதத்துணிந்தபோது, நம்மபணடிதர்கள் தடுக்கின் கீழ்நுழைவதற்குக் காரணமென்னவென்பதை மாத்திரம் சற்று யோசிக்கவேண்டும். ஆதிமுதல் மதப்பிரவர்த்தகாகளான சங்கர, ராமானுஜ, மத்துவாசாரியாதிகள் அவரவர்கொள்கையைஸ்தாபித்ததாய்க்கிரந்த மெழுதுவதும், பின்னோரில் எவரெவருக்கு எந்தெந்தகொள்கைசரியானதென்று தோன்றியதோ அதையவரவர் அனுஷ்டிப்பதும் அனுவதிழக்கமாயிருக்கின்றதேயன்றி, கக்ஷிகூட்டிக் கையெழுத்துவாங்கி வாதிப்பதன்று.

கடைசியாக இவ்விஷயத் திலிவ்வளவெழுதியதைக்குறித்து எங்கட்குண்டாயிருக்கும் மனவருத்தத்தை யெழுதுவதைவிட ஊகிப்பதுசுலபம். நாங்கள்தர்மயுக்தத்துக்கு சித்தமாயிருக்கையில், எங்கட்குப்புத்திசொல்லத்தக்கவர்கபடமார்க்கத்தை யனுசரித்து, எங்களைபபரிபவப்படுத்த யத்தனிக்கின்றமையால், விதியின்றி மனவருத்தத்துடன் இவ்வளவுஎழுதினோம். குணத்தில் திருஷ்டியுள்ளதார்ம்மிகர்கள் எங்கள் சிந்தயை மனதிற்கொண்டு எங்களை மன்னிப்பார்களென்று நம்புகிறோம்.

## விண்ணப்பம்.

எங்கள் ஸமாஜத்தாருடைய முதல் விண்ணப்பத்தைப் படித்துப்பார்த்தகனவான்களில் சிலர் அதிலுள்ள அபிப்பிராயங்களைச் சரியானவையென்றேஒத்துக்கொண்டபோதிலும், ஒரு விஷயத்தில்மாத்திரம் எங்களிடத்தில் பிசகிருப்பதாய்க் கிரஹித்தார்களென்று கேள்விப் படுகிறோம். அதென்னவெனில் வைஷ்ணவர்களிடத்திலுள்ள பழுதுகளைப் போலவே, ஸ்மார்த்தர்களிடத்திலுள்ளன வற்றையும்நாங்களெடுத்துக் காட்டவில்லையெனறும் ; சங்கராசாரியருக்கு ஸ்ரீமத்வேத மூர்த்தியென்னும் விசேஷணமளித்த நாங்கள் ராமானுஜாசாரியருக்கு யாதொரு விசேஷணமும் கூறவில்லையென்றும் ; ஆகையால்நாங்கள் சற்றுபக்ஷபாதத்துக்குட் பட்டோமென்றும்; அக்கனவான்களபிப்பிராயப்படுகின்றனர். நாங்களவ்வாறு செய்ததற்கு ஹேதுவின்னதென்று நம்மன்பர்களுக்குத் தெரிந்திருந்தால், அவர்களுக்கித் தன்மையான அபிப்பிராயம் ஜனிக்கமாட்டாதாகையால், அதைச்சற்று சுருக்கமாய இதனடியிலுரைக்க நிச்சயித்தோம்.

சங்கர, ராமானுஜ, மத்துவாசாரியர்களென்னும் மும்மதப் பிரவர்த்தகர் களுக்குள், சங்கராசாரியர் முதல்வரா யிருந்ததுமன்றி, வேதத்தில் சிறந்தபாகமாகியஉபநிஷத்துக் களுக்கு பாஷியம் செய்திருக்கிறார். ராமானுஜாசாரியரோவெனில் வேதத்தில் ஒருஎழுத்துங் காவது பாஷியம் செய்ய வில்லையென்பது லோகப் பிரஸித்தம். ராமானுஜாசாரியரைவிடபலமடங்கு சிரேஷ்டமானவும் அதிகமானவும் கிரந்தங்களைச்சங்கராசாரியர் செய்திருக்கிறாரென்றுஅறியாதவர் வெகுசிலர். ராமானுஜாசாரியர் சூத்திரபாஷியமும் கீதாபாஷியமும்செய்யவில்லையாவென்றுசிலவைஷ்ணவர் கேட்கின்றனர். சூத்திரத்துக்கும்,கீதைக்கும் கூடசங்கராசாரியர் முதலில்சகலசிரமமும்பட்டு சாஸ்திரரீதிக்குபாஷியம்செய்துஉருவேற்படுத்தினபிறகு அவர் அத்துவைத பரமாய்ப் பொருள்செய்ததற்குமாத்திரம் ராமானுஜாசாரியர்வேறுவிதஅர்த்தங்கூறியிருக்கின்றனர். முதலில்விடுகட்டுவது கடினமோ அல்லது அதைமுடித்தபிறகு அதில்குற்றம் பிடிப்பது கடினமோவென்பதைச் சற்றுகவனிக்கவேண்டியது. அப்படிஅபிப்பிராய பேதமுள்ளவிடங்களில் ராமானுஜாசாரியர் செய்த பொருளே சரியென்றனைவரும் அனுஷ்டிக்கவில்லை. இவர்செய்த கருத்தை யனுசரிப்பவர் சிலரும், சங்கரர்செய்த பொருளை அனுஷ்டிப்பவர் பலருமாயிருக்கின்றனர். தென்னிந்தியாவொன்றிலுள்ளவைஷ்ணவர்கள் தவிரமற்றவர்களுக்கு ராமானுஜாசாரியர் சூத்திரபாழியமும் கீதாபாஷியமும் செய்திருக்கிறாரென்று தெரிந்திருப்பதும் அருமை. சங்கராசாரியர்செய்தபாஷியத் திரயங்களும் இந்த பரதகண்டம் முழுமையிலும் மாத்திரமேயன்றி, இங்கிலண்டு, ஜர்மனி, பிரான்ஸு, முதலிய அன்னிய நாடுகளிலும் பரவிஅரசாண்டு கொண்டிருக் கின்றன. இந்த ஹேதுக்களாலே ராமானுஜாசாரியர் பிற்காலத்தில் செய்த கிரந்தங்களை மாத்திரமேயன்றி பலமடங்குஅதிகமானவும், மேலானவும் கிரந்தங்களும் முக்கியமாய் உபநிஷத்துபாஷியமும் முற்காலத்திலே செய்திருக்கின்றமையால், சங்கராசாரியருக்குமாத்திரம் ஸ்ரீமத்வேதமூர்த்தி யென்னும்விசேஷணத்தை உபயோகித்த தற்குப் போதுமான காரணம் விளங்குமென நம்புகிறோம்.

இன்னுஞ் சற்று ஆழமாய் விசாரிக்கப் புகுவோர் வைஷ்ணவர்களுடைய ஆசாரியர்களைத் திட்டுவார்களாகிலும், நாங்களவ்வாறு செய்யவுமில்லை, செய்யவேண்டுமென்பது எங்கள்கருத்துமன்று கண்ணுக்குத் தெரியாத பொருள்களைக் குறித்துப் பலர் பலவித அபிப்பிராயங்களைச் சொல்வதுமனிதர்க்கியல்பு. இன்னார்கொள்கை பழுதானதென்று நிச்சயிக்கப் பிரத்தியக்ஷப் பிரமாணம் கிடையாதவரையில், அனுமானத்தால் அவரவருக்கு யுக்தமானவற்றை யவரவர்அனுஷ்டித்துக்கொள்வது மாத்திரம் விவேகத்துக்கடுத்த காரியமாக விருக்குமேயன்றி வேறுவிதகொள்கையுள்ளவர் முகத்தில் விழிக்கலாகாதென்று பகைத்தலன்று. மதமென்பது அவனவனுக்கும் கடவுளுக்கும் தனித்தாயும், பிறர்க்கு சம்மந்த மற்றதாயுமுள்ள

ஒருபதார்த்தமாம். ஆகையால் மதத்தில் வழுவுவோன் கடவுளுக்கு உத்தரவாதியேயன்றிமக்கட்கல்ல. கடவுளோ தம்மை நம்பினவர் நம்பாதவர் அனைவர்க்கும் உணவையளித்துக்காக்கின்றனர். அபராதிகள் விஷயத்திலேயே கடவுளின் சரிதையிவ்வாறிருக்க, வைஷ்ணவர்கள் தவிர மற்றவர்களெல்லாம் அபராதிகளென்பதற்குயாதொரு ஆதாரமும் கிடையாதிருக்கையில் வைஷ்ணவாசாரியர்கள் இதரவகைபிராம்மணருடன் கொள்வினைகொடுப்பினையும் போஜனப் பிரதி போஜனமும் கூடாதென்று நிஷேதித்து தேசத்தில் ஐகமத்தியத்தைக் கெடுத்தனர். இந்த துர்மார்க்கத்தில் இதரமத ஆசரியர்கள் பிரவேத்தார்களெனப்பொருந்துமோ. பற்றைவிட்டுயோசிப்பவர் சைவமதத்துக்கும் வைஷ்ணவமதத்துக்கும் சுவரூபதாரதம்மியமிருப்பதாய்நினைப்பார்களோ. சிவனைக்காட்டிலும் விஷ்ணுவேறென்றும்தாழ்ந்தவரென்றும் சைவர்நினைப்பது பிசகெனில், விஷ்ணுவைக் காட்டிலும் சிவன்வேறென்றும் தாழ்ந்தவரென்றும்வைஷ்ணவர்கள் கொள்வது மாத்திரம் சரியெனப் படுமோ. ஒவ்வொரு குணத்தைப் பற்றியொவ்வொருபெயர் கடவுளுக்கு வந்தபோதிலும், அவையெல்லாம குறிக்கும் பொருளொன்றேயென்பதற்குநிதர்சனமாக "அவரேபிரும்மா, அவரேசிவன், அவரேஇந்திரன்; அவரே அக்ஷரன், அவரேசகலத்துக்கும் அரசன். *" என்று சுருதி முறையிடுகின்றமையால், அவர்களுள் ஒருவருடையகொள்கைஎவ்விதஆக்ஷேபங்களுக்குள்பட்டதோ அதேயாக்ஷேபங்களுக்குமற்றொருவர் கொள்கையும்உட்பட்டிருக்கிறதென்றுஸ்பஷ்டமாயேற்படுகிறதல்லவா. சைவர்களுடையஇக்கொள்கைப் பழுதாயினும், அவர்கள் இதரபிராம்மணரைநிக்கிரகிக்கவில்லை. வைஷ்ணவர்களோவெனில் * "வாதிஹம்ஸாம் புதாசாரியருடைய சிஷியராகிய வேதாந்தாசாரியரிடத்தில் பக்தியில்லாதவர் யதிந்தரராகியராமானுஜாசாரியருக்குப் பகைவராவார்கள். ராமானுஜாசாரியருடைய விசுவாசத்தைப் பெறாதவர்க்கும் விஷ்ணுவின்காருணியத்துக்கும் வெகுதூரம். ஆகையால்அப்படிப்பட்டவர்களுக்கு முக்தியென்னும் வார்த்தைதானேது" என்றும் இன்னுமித்தன்மையானசுலோகங்களாலும், மறுமையின்பத்தைஒவ்வொருவகுப்பாருக்கும் குத்தகையாய்க்கொண்டதுமன்றி, இம்மையிலும்மற்றபிராம்மணர்ஒரேவம்சத்திலும், நாட்டிலும், சாகையிலும், சூத்திரத்திலும் பிறந்துசாஸ்திரோக்தவிதிகளினின்றும் நழுவாமலிருந்தாலும்அவர்களைத்தீண்டவும்கூடாது பார்க்கவும்கூடாதென்றும், ஒருவேளைஸ்மார்த்தர்களுடன் பேசும்படி நேரிட்டால், பூணூலை நிவீதிப்பாயாய்ப் போட்டுக்கொள்ளவேண்டுமென்றும், இதரகொள்கையுடைய பிராம்மணர்பார்த்துஉண்ணக்கூடாதென்றும், இன்னு மித்தன்மையான கோரமான வேற்பாடுகளெல்லாம் செய்துகொண் டிருக்கின்றனர். வேதசாஸ்திராதிகளில் இக்குமார்க்கங்களுக்கு ஆதாரமுண்டோவெனில்அப்படிக்குமில்லை. அவற்றில் பிராம்மணசாமானியத்தையும்ஒரேவகையாய்ப் படித்திருக்கின்றது. இவ்வாறுவைஷ்ணவர்களுக்குரித்தானபுனைசுருட்டுக்களையும், பித்தலாட்டங்களையும்குறித்துத் தனியாய் ஒரு கிரந்தமெழுதினாலொழியதிருப்திகரமாயிராது.

வைஷ்ணவர்களிலுள்ளபழுதுகளையெடுத்துக் கூறுவதுபோலவே, சைவாதிப்பிராம்மணர்களுககுரிய பிசகுகளையும் பிரஸ்தாபிக்கலாகாதாவென்று சிலர் கேட்கின்றனர். வைஷ்ணவர்களிடத்தி லில்லாத பழுதுகள் சைவாதிகளிடத்தி லிருப்பதாய் யாரேனும் எடுத்துக் காட்டுவார்களாகில், அப்போது அதையோசிக்கலாகும். பொதுவான குறைவுகளைக் குறித்த

* ஸ ப்ரஹ்மா ஸ ஶிவஸ்ஸேந்த்ரஸ்ஸோக்ஷரஃ பரமஸ்ஸ்வராட்.

* வாதிஹம்ஸாம்புவாஹார்ய பதஶிஷ்யாநாஶ்ரிதாஹ் நாயதீந்த்ர ப்ரியாஸ்ஸ்யுஃ. யதீந்த்ராப்ரியா விஷ்ணு காருண்யஹீநாஃ குதோ முக்திவார்த்தா ஹி தாத்ருக்விதாநாம்.

ப்பிரஸ்தாபத்தில் அனைவர்க்கும்பங்குண்டாகிலும் தனித்தகுறைவுகள்விசேஷமாய் ஆரிடத்திலிருக்குமென்றால், வைஷ்ணவர்கள் தவிர மற்றவர்களிடத்தில் அவை கிடைக்குமென்று நாங்கள்நினைக்கவில்லை.

இவ்விஷயத்தில் செய்த இவ்வளவுபிரஸ்தாபமும், நம்மன்பரில் சங்கைஜனித்த சிலர் பொருட்டுச் செய்தனமேயன்றி வலியவல்லவாகையால், நம்மவர் எங்களைக் கோபிக்சார்களென்று உறுதியாய் நம்புகிறோம்.

---

## ருக்குவேதசம்ஹிதை.

(தொடர்ச்சி.)

### சூக்தம், உ. (௰௩)

[இதற்குருஷியும் பாவும் முன்போல, தேவதைகள் "ஆப்ரீ" என்னும்பொதுவாந பெயருடையபலவிதமானவைகளாம். அவைகளை அந்தந்தருக்குகளில்அறியலாம்,]

### வர்க்கம்-உச.

க. ஸுஸமித்தோ ந ஆவஹ தேவா

நக்நே ஹவிஷ்மதே, ஹோத: பாவக

யக்ஷி ச.

ஓ அக்கினியே! ஸுஸமித்தரா*கியநீர் எங்களுடைய யசமானன்பொருட்டு தேவர்களை (அழைத்துக்)கொண்டுவாரும். ஹோமம்பண்ணுகிறவரே, புனிதமாக்குகிறவரே, யாகமும்பண்ணும்.

உ மதுமந்தம் தநூநபாத் யஜ்ஞம்

தேவேஷு ந: கவே, அத்யா க்ருணுஹி

வீதயே.

மேதாவியானவரே, தநூனபாத் † தாகிய நீர், எங்களுடையரசம்பொருந்திய* ஹவிஸை, இப்பொழுது, தேவர்களிடத்தில், உண்ணற்பொருட்டு (அடையச்)செய்யும்.

௩. நராசம்ஸமிஹ ப்ரியமஸ்மிந்ய

ஜ்ஞ உபஹ்வயே, மதுஜிஹ்வம் ஹவிஷ்க்ருதம்.

பிரியமானவரும், இனியநாவினை † யுடையவரும், ஹவிஸைப் பண்ணுகிறவருமாகிய நராசம்ஸரை ‡ இந்தயாகத்தில் இவ்விடம் அழைக்கிறேன்.

௪, அக்நே ஸுகதமே ரதே தேவா

ம் ஈளித ஆவஹ, அஸி ஹோதா மநுர்

ஹித:.

அக்கினியே, (நம்மால்) புகழப்பட்ட § (நீர்)தேவர்களை மிகவும் சுகமானதேரில் (வைத்துக்) கொண்டுவாரும். (யசமானனாகிய) மனிதனால் (இங்கே) ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறநீர் (தேவர்களை) அழைக்கிறவராயிருக்கிறீர்.

ரு. ஸ்த்ருணீத பர்ஹிராநுஷக் க்ருத

---

* ஸுஸமித்தர்=மிகநன்றாய்மூண்டவர். இதுஅக்கினியினுடைய ஓர்ரூபம், இதுதான் இந்தருக்குதேவதை.

† இதுவும் அக்கியினுடைய ஓர்ரூபம். இப்பேரின்பொருள்.

"நெய்யை அல்லது தன்சரீரத்தை உண்ணுகிறவர் அல்லதுகாவாதவர்"என்பதாம், அக்கினியின் இந்தரூபம் இந்தருக்குவுக்குத்தேவதை.

* மூலத்தில் மதுமந்தம் யஜ்ஞம்=மதுவுடன் கூடிய யக்கியம்.

† மூலத்தில் மதுஜிஹ்வம்=மதுகூடியநாவினையுடையவரை=இனிமையாய்ப்பேசுகிறவரை அல்லது இனியவற்றை உண்ணுகிறவரை.

‡ அக்கினியினுடைய இது ஒருரூபம். இந்தருக்குவுக்கு இதுதான் தேவதை. இப்பெயரின்பொருள் "மனிதரால்புகழத்தக்கவர்" என்பதாம்.

§ மூலத்தில் "ஈளித" இந்த ருக்குவுக்கு "இட்"என்னும்பெயரையுடைய அக்கினியின்ரூபம் தேவதைஎன்றும், அதைக்குறிக்கும் பொருட்டே ஈளித என்றுமொழிபிரயோகிக்கப்பட்டிருக்கிறதாயும் உரையாசிரியார் சொல்லுகிறார்.

தப்ருஷ்டம் மநீஷிணஃ. யத்ராம்ருதஸ்ய சக்ஷணம்.

ஓபுத்திமான்களே! * எதனிடத்தில் அமிருதத்தின் தரிசனம்(உண்டாகிறதோ†) அப்படிப்பட்ட. தொடர்ச்சி யானதும், மேற்புறத்தில் நெய்வார்க்கப் பட்டிருப்பது மாகியதர்ப்பையை ‡ ப்பரப்புங்கள்.

சு. வி ச்ரயந்தாம் ருதாவ்ருதோ த்வாரோ தேவீரஸச்சதஃ அத்யா நூநஞ்ச யஷ்டவே.

யாகத்தை விருத்திசெய்கின்றவைகளும், பிரகாசமானவைகளும், (இதுவரையில்)புகுவோரில்லாதிருந்த வைகளுமாகிய (யாகசாலையின்) வாயில்களை இன்றைதினம் அவசியமாய் யஜிக்கும்பொருட்டு திறவுங்கள். §

## வர்க்கம்-உரு.

எ நக்தோஷாஸா ஸுபேசஸாஸ்மின் யஜ்ஞ உப ஹ்வயே, இதம் நோ பர்ஹிராஸதே.

அழகான வடிவங்களையுடைய இரவையும்,வைகறையையும், ¶இந்த நம்முடைய தர்ப்பையையடையும் பொருட்டு இந்த யாகத்தில் அழைக்கிறோம்.

அ. தா ஸுஜிஹ்வா உப ஹ்வயே ஹோதாரா தைவ்யா கவீ, யஜ்ஞம் நோ யக்ஷதாமிமம்.

நன்னாவினையுடைய வர்களும், * புத்திசாலிகளுமாகிய, தேவர்களுக்குரிய இவ்விரண்டு ஹோதாக்களை † அழைக்கிறேன். (அவர்கள்)எங்களுடைய இந்தயக்கியத்தை நிறைவேற்றுவார்களாக.

கூ. இளா ஸரஸ்வதீ மஹீ திஸ்ரோ தேவீர்மயோபுவஃ, பர்ஹிஃஸீதந்த்வஸ்ரிதஃ.

பிரகாசமானவர்களும், இன்பம்தருகின்ற வர்களும், அழிவற்றவற்றவர்களுமாகிய, இளா, சரஸ்வதி, மகீஆகிய மூவரும்தர்ப்பையின்பேரில்உட்காரக்கடவது. ‡

---

* ருத்துரவிக்குகளே.

† அமிருதம்போன்ற நெய்யானது காணப்படுகின்றதோ அல்லது சாவற்றவராகிய அக்கினியானவர் காணப்படுகிறாரோ என உரை.

‡ மூலத்தில் பர்ஹிஃ இதனால் இந்தருக்குத்தேவதை பர்ஹிஎன்றும்பெயருடையஅக்கினி ரூபமேயென்பது குறிக்கப் படுகிறதென்று உரையில் சொல்லப்பட்டிருக்கின்றது.

§ இந்தருக்குக்குத்தேவதை யக்கியசாலையின்துவாரமே.

¶ மூலத்தில் நக்தோஷாஸா = நக்த (இரவு) உஷஃ(வைகறை)ஆனால் இவ்விடத்தில் இம்மொழிகள் ராத்திரிக்கும், விடியற்காலத்திற்கும் அபிமானதேவதைகளான அக்கினியின் இரண்டு ரூபங்களைக் குறிக்கின்றனவென்றும் அவைகளே இந்த ருக்குதேவதையென்றும் பாஷியத்தில் சொல்லப் பட்டிருக்கிறது.

* உரையில் "ஹோதாக்களாகிய அவ்விரண்டு அக்கினிகளை"என்று பொருள் செய்யப்பட்டும் (அ,என்னும்சுட்டினால் யாகம் பண்ணுவோர்க்குத் தெரிந்திருக்கிற பிரசித்தமான இரண்டுஅக்கினிகள் குறிக்கப்படுகின்றன என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் அவ்வக்கினிகளின் சிறப்புப்பெயர் சொல்லப்படவில்லை. அநுக்கிர மணிகையென்னும் அட்டவணையில் "பிரசேதஸ்"என்றும்பெயர் சொல்லியிருக்கிறது. அப்பேரின்பொருள் சிறந்த அறிவுடையவன் என்பதாம்.

† இனிமையாய்ப் பேசுகிறஅல்லது அழகிய சவாலையையுடைய என்று உரையில்பொருள் செய்யப்பட்டிருக்கிறது.

‡ "இள சரஸ்வதி, மகியாகியமூன்றுதேவிகளும் தர்ப்பையில் உட்காருக"என்று சகசமாய்ப்பொருளாகும். உரையில் மேற்படி பெயர்கள் அக்கினியின் மூன்றுரூபங்களைக் குறிக்கிறதாகக்கொண்டு "தேவி"சப்தத்துக்குப் "பிரகாசமான"வென்று பொருள் செய்யப்பட்டிருக்கிறது. இவைகள்அக்கினியின் மூன்றுசுவாலைகளின்பெயரென்றும்சொல்லப்படும். தேவிகளாகக் கொள்ளும்பொழுது, இளா=விஷ்ணுவின் மனைவியாகியபூதேவி, சரஸ்வதி=பிரம்மாவினுடைய மனைவி, மகீ=ஆதித்தியர்களில் ஒருவராகிய பரதன் என்பவருடைய மனைவி பாரதி யென்பவள்.

௰. இஹ த்வஷ்டாரமக்ரியம் விச்வரூப முபஹ்வயே அஸ்மாகமஸ்து கேவல:.

முதன்மையானவரும், பலரூபங்கள்கூடியவருமாகிய த்வஷ்டாவை * இங்கேஅழைக்கிறேன். (அவர்) நமக்கே யுரியவராயிருப்பாராக.

௧௧. அவஸ்ருஜா வநஸ்பதே தேவ தேவேப்யோ ஹவி:, ப்ரதாதுரஸ்து சேதநம்.

ஓ வனஸ்பதியே, † கடவுளே, தேவர்களுக்கு ஹவிஸைச் சமைப்பியும். (ஹவிஸை)கொடுக்கிறவ(ராகிய யசமான)னுக்கு அறிவானது உண்டாகக் கடவது.

௧௨. ஸ்வாஹா யஜ்ஞம் க்ருணோதநேந்த்ராய யஜ்வநோ க்ருஹே தத்ர தேவாம் உபஹ்வயே.

யசமானனுடைய வீட்டில் இந்திரன் பொருட்டுசுவாகா‡யக்கியத்தை(ருத்துவிக்குகள்)செய்யட்டும்.அவ்விடத்திற்குதேவர்களை அழைக்கிறேன்,

* த்வஷ்டா—தச்சன், சிற்பன்(பகுதி த்க்ஷ்—சீவுதல்) ஆதலால் இது பலவிடங்களில் விசுவ கர்மாவினுடையபெயராகவழங்கும். துவஷ்டாவானவர் விலங்கின் ஆணும் பெண்ணும் படைத்தார்என்றுசுருதியில்சொல்லப்பட்டிருக்கின்றது. இவ்விடத்தில் இம்மொழி அக்கினியின் ஒரு பெயர்என்றுஉரையாசிரியர் சொல்லுகிறார்.

† வனஸ்பதி—மரம். இங்கே அக்கினியின்ஒரு ரூபம் எனப் பொருள் செய்யப்பட்டிருக்கிறது.

‡ முன்ருக்குகளில் போல "சுவாகர" என்பது அக்கினியின் ஒருரூபமென்றும் அந்த அக்கினியினால் நிறைவேற்றப்பட்ட யக்கியம் சுவாகாயக்கியம் என்றும் உரையில் சொல்லப்பட்டிருக்கிறது. சுவாகாஎன்றும் வார்த்தை சாதாரணமாய் ஹவிர்தானத்தைக்குறிக்கிறது. மகாபாரதத்தில் சுவாகாஎன்பவள் அங்கிரஸ் முனிவனுடைய குமாரனாகிய பிருகஸ்பதியின் மகள்என்று சொல்லியிருக்கிறது. புராணங்களில் அவள் தக்ஷனுடைய மகளென்றும் அக்கினியினுடைய மனைவியென்றும் கூறப்பட்டிருக்கின்றது.

## பகவத்கீதை.

### ௧௨-வது அத்தியாயம்.

#### அர்ஜுனன்சொல்.

௧. இவ்வாறு எப்பொழுதும் சமாஹிதமானவர்களாய் எந்தபக்தர்கள் உன்னைஉபாசிக்கிறார்களோ, யாரானால் இந்திரியாகோசரமான பிரம்மத்தைத் தியானிக்கின்றார்களோ. இவர்களுக்குள்யார் விசேஷயோகமறிந்தவர்கள்.

#### கிருஷ்ணன்சொல்.

௨. எவர்கள் என்னிடத்தில் மனதைவைத்து நிரந்தர சமாஹித சித்தாாகி உத்கிருஷ்டமான சிரத்தையோடு கூடின வர்களாய் என்னையுபாசிக் கிறார்களோ அவர்கள் மிகவும் யுக்தமான வர்களென்று எனக்கு இஷ்டர்கள்.

௩. யாரானால் நாசரஹிதமானவும், நிர்தேசிக்கக் கூடாதவும், ரூபரஹிதமானவும் எங்கும் வியாபித்திருக்கின்றவும், தியானிக்கக்கூடாதவும், பிரகிருதியிலிருக்கப்பட்டவும், சலனமற்றவும், நித்தியமானவும் பிரம்மத்தை உபாசிக்கின்றார்களோ.

௪. அவர்கள் இந்திரியசமூஹங்களைச்செம்மையாக நிக்கிரகித்து எப்பொழுதும் சமபுத்தி யுடையவராகி சமஸ்த பிராணிகளின் ஹிதத்தையும்விரும்பினவராகி, என்னையே அடைகின்றனர்.

௫. அந்தப்பிரம்மோபாசனையைவிரும்பியவர்களுக்கும் பிரயாசை அதிகமுண்டு. ஏனென்றால் தேஹாபிமானமுடைய வர்களால் அக்ஷரஸ்வரூபமான அந்தமார்க்கம்பிரயாசையில்லாமல் அடையப்படுவதில்லை.

௬. யாரானால் நானே உத்கிருஷ்ட கதியென்றவராகி சமஸ்தகர்மங்களையும் என்னிடம்ஸமர்ப்பித்து என்னைவிடவேறொன்றையும் பற்றாதசமாதியினால் என்னைத்தியானிப்பவராகி உபாசிக்கின்றார்களோ,

௭. ஓய் பார்த்தனே ! என்னிடமிருத்தப்பட்ட சித்தமுடைய அவர்களுக்கு, நான், மிருத்துயுரூபமாகியசம்சாரக்கடலினின்றும்உத்தரிப் போனாகச் சக்கிரத்திலாகின்றேன் (என்னால் அவர்களைத் துக்கத்தினின்று சீக்கிரம் நிவர்த்திசெய்கின்றேன்,)

௮. என்னிடத்திலேயே மனதை யிருத்துவாய், என்னிடத்தே புத்தியைச் செலுத்துவாய், தேஹாந்தரத்தில் என்னிடத்தேயிருக்கக் கடவாய்; (இதற்குச்)சந்தேகமில்லை.

௯. ஓய்தனஞ்சயனே! அதன்பிறகு என்னிடத்துசித்தத்தை நிச்சலமாக இருத்தச்சக்தியில்லாதவனாகில்' அதன்பிறகு அப்பியாச யோகத்தினால் என்னையடையக்கோருவாய். (இந்த அப்பியாச யோகமானது-௬வது - அத்தியாயத்தில் சொல்லப்படுகின்றது.)

௧௦. அந்த அப்பியாசயோகத்திலும் அசக்தனாயிருந்தால் என்விஷயமாகச் செயயப்படுங்கர்மமே பிரதானமாக உடையவனாவாய். என்பொருட்டு சத்கருமங்களைச் செய்பவனாகி சித்திபெறுவாய்.

௧௧. இதுவுஞ்செய்ய அசக்தனாயிருந்தால், என்னுடையயோகத்தை ஆசிரயித்தவனாகி நியமிக்கப்பட்ட சித்தமுடையவனாகி, ஸாவகர்ம பலத்தியாகஞ் செய்வாய்.

௧௨. அப்பியாசயோகத்தைப் பார்க்கிலும் ஞானயோகம் சிரேஷ்டமானது, ஞானத்தைப்பார்க்கிலும் தியானம் விசேஷமானது. தியானத்தைவிட கர்மபலத்தியாகம்உசிதம்,இந்தத் தியாசத்தைவிட சமம்உசிதமானது)

௧௩. சமஸ்தபிராணிகளுக்குஞ் சத்துருவாகாதவனும், மித்திரனும், கருணையுள்ளவனும், மமகாரரஹிதனும், அஹங்காரரகிதனும், சுகதுககங்களில் சமமானவனும், பொறுமையுள்ளவனும்,

௧௪. எப்பொழுதுஞ் சந்தோஷமுடையவனும், தியானபரனும், நியமிக்கப்பட்டமனோவிருத்தியுடையவனும், சம்சய ரஹிதனும், என்னிடம் அர்ப்பிதமாகிய மனமும் புத்தியுமுடையவனும், என்பக்தனும் ஆகின்றவன்யாரோ அவன் எனக்குப் பிரியமானவன்.

௧௫. எவனால் ஜனங்கள் பயமடையார்களோ, எவன் ஜனங்களால் பயமடையானோ, எவன் பிரியத்தினாலும், பொறாமையினாலும், பயத்தினாலும் விடப்பட்டவனோ அவன் எனக்குப் பிரியமானவன்.

௧௬. அபேக்ஷாரஹிதனும், பவித்திரனும், சமர்த்தனும், பக்ஷரகிதனும், நிர்பயமுடையவனும், ஸர்வசங்கல்பரகிதனும், என்பக்தனும் யாரோ அவன்எனக்குப் பிரியமானவன்.

௧௭. எவன் சந்தோஷிக்கிற தில்லையோ, துவேஷிக்கிறதில்லையோ, துக்கிக்கிறதில்லையோ, சுபாசுபங்களைப் பரித்தியஜித்தவனும், பக்தியுள்ளவனும் எவனோஅவன் எனக்குப் பிரியமானவன்.

௧௮. சத்துருவினிடத்தும், மித்திரனிடத்தும், மானாவமானங்களிலும், சமானனாய், சீதோஷ்ண சுகதுக்கங்களிலும், சமானனாய், சங்கவர்ஜிதனும்,

௧௯. நிந்தையிலும் ஸ்துதியிலும் சமத்துவம்வஹித்தவனும்,வாக்நியமமுடையவனும், எவ்வளவிலும் திருப்தியுடையவனும், பக்தியுள்ளவனுமாய் எந்தபுருஷன் இருக்கிறானோ அவன் எனக்குப்பிரியன்.

௨௦. யாரானால் நானே பரமகதியென்றடைந்து, இந்த தர்மாமிருதத்தை விசுவஸித்தவராகி, இப்பொழுது சொல்லப்பட்ட விதமாக உபாசிக்கின்றார்களோ அவர்கள்எனக்கு அதிகப் பிரியமானவர்கள்.

---

## முண்டகோபநிஷத்து.

(தொடர்ச்சி.)

மூன்றும்முண்டகம்.

(௨-வது அத்தியாயம்.)

எதை யாதாரமாகக்கொண்டு சகலமும் சுப்பிரமாய்ப் பிரகாசிக்கிறதோ அந்தஇடமாகியபரபிரும்மத்தை அவன் அறிகிறான். யார்புருஷனை உபாசிக்கிறார்களோ அந்ததீரர்கள் விருப்பமற்றவராக இந்த ஜன்மததைக்கடக்கிறார்கள். பலவிருப்பங்களை யெண்ணிக்கொண்டு விரும்புவான், அவ்விருப்பங்களால் அவ்வவ்விடங்களிற் பிறக்கிறான். விருப்பமற்றவனாயும் கிருதார்த்தனாயு முள்ளவனுக்கு இம்மையிலே சகலவிருப்பங்களும் லயிக்கின்றன. இந்தஆத்மா செல்வத்தால்விளங்காது, பேதையாலும் விளங்காது வெகுவிதஞானத்தாலும் விளங்காது, அதற்கு இஷ்டமுள்ளவனுக்குமாத்திரமே தன்சுவருபத்தை விளக்குகின்றது. இவ்வாத்மாபலமற்றவனால் அடையத்தக்கதன்று, பிரமாதத்தாலும் அடையத்தக்கதன்று. குறியற்றதபஸாலு மடையத்தக்கதன்று. இந்த உபாயங்களால் எந்தவித்துவான் முயலுகின்றானோ, அவனிடத்தில் பிரும்மதர்மமான இவ்வாத்மா செல்லுகின்றது. இதையடைந்து ருஷிகள் ஞானத்தினால் திருப்தாளாய் ஆத்மாவைச் சீர்திருத்திக்கொண்டு, விருப்பங்களையொழித்து, சாந்தாளாயும்,யுக்தாத்மாக்களாயும் தீரர்களாயுமிருந்துகொண்டுசர்வவியாபகராயும் சர்வாத்மகராயுமுள்ளவரை அவர்கள் பலவிதத்திலுமடைந்தனர். வேதாந்தஞானத்தால்தெளிந்து, சன்னியாசயோகத்தால் சுத்தமானமனதையுடைய யதிகள்பரமாந்தியகாலத்தில் பிரும்ம லோகங்களில் பரமான அமிருதத்தினின்றும் முக்தராகின்றனர். பதினைந்துகலைகளும்,அதநினிடத்தைச்சேர்ந்து, அந்தந்தபொறிகளும், அதநின்

அபிமானதேவதைகளிடத்தில் சேர்ந்து, சர்மங்களும் ஞானமயமான ஆத்மாவும், நிர்விகாரமான பரதேவதையில் ஒன்றுய்ச்சேர்கின்றன. பெருகும்நதிகள் சமுத்திரத்தைச் சேர்ந்து பேரும் உருவும்விட்டு அஸ்தமிக்கின்றவாறே, வித்துவானும் பேரும்உருவும்விட்டு பெரியோர்க்கும்பெரியோராகியதிவ்வியபுருஷனை யடைகிறுன். அந்தப்பரப்பிரும்மத்தையறிந்தவன் பிரும்மமாகவே யாகிறுன், அவன்குலத்தில் பிரும்மத்தை யறியாதவன் பிறக்கிறதில்லை; துக்கத்தையும் பாபத்தையும், கடந்து குகையின்முடிகளினின்று விடுபட்டுஅமிருதனுகிறுன். அந்தவிஷயத்தில் செய்பவராயும், கேட்போராயும், பிரும்மைகநிரதாளாயும், ஏகர்ஷியினிடத்துசிரத்தையுடன்ஹோமம் செய்வோராயும்சிரோவிருதத்தைமுறைப்படிசெய்தவராயுள்ளவருக்குஇந்தபிரும்ம வித்தியையைச் சொல்ல வேண்டுமென்று ருக்கினுல் சொல்லப்பட்டது. ஆகையாலிந்த உண்மையை முற்கால்அங்கிரஸருஷிக்குச்சொன்னுர். விருத பூர்த்தியில்லாதவன் இதையத்தியயனம் செய்யக்கூடாது. பரமர்ஷிகளுக்கு நமஸ்காரம், பர்மர்ஷிகளுக்கு நமஸ்காரம்.

---

## அர்த்தசாஸ்திரம்.

சம்பளங்களைப் பற்றியும், ஜனசங்கியையைப்பற்றியும்.

முதல் அதிகமாக, வேலைக்காரருக்கு கிராக்கியும் அதினலவர்களுடைய கூலியு மதிகரிக்குமென்றும்; முதல் விசேஷமாகும் காலத்தில் அதைப் படைத்தவர்கள் அற்பலாபத்துடன் திரப்தி யடைந்து வேலைக்காரருக்கு அதிகசம்பளந்தரவேண்டுமென்றும்முன் கூறியிருந்தோமல்லவாஆனல்நாம்முன்கூறியபடி புதிதாய் குடியேறியவர்கள் இரண்டாம் வருஷத்தில் வீடுகட்டுவதிலும் நிலத்துக்கு வேலிபோடுவதிலும் தாங்கள் பிரயாசையைச் செலுத்திவிடுவார்களேயாகில் பயிரிடாத்தினலே தின்பண்டங்கள் குறைந்து வேலைக்காரர் முன்னிருந்த கஷ்டதசைக்கு மீள்வார்களே யென்று சந்தேகந்தோன்றலாம். ஆகிலும் வேலைக்காரர்களைஉபயோகித்துக் கொள்பவர்களுக்கு அவர்கள் தங்களைவிட்டுப் போகாமல் தங்கள் ஊழியத்திலேயே வைத்துக்கொள்வதற்குஅக்கரைப்பட்டிருப்பார்களாகையால் அவர்களுக்குத் தகுந்த கூலிகொடுத்து காப்பாற்றமிகவும்ஜாக்கிரதை உள்ளவர்களா யிருப்பார்கள். ஜான் யென்பவன் ஜேம்ஸ் என்பவனைப்போல அதிக பயிரைவிளைவித்துக் கொள்ளாவிட்டால் மறுவருஷம் அவன் அவ்வளவுவேலைக்காரரைவைத்துக் கொள்ள சக்தியற்றவனுவான். ஆகையால் நிலத்தைப்படைத்தவொவ்வொருவனும் தனதுவேலைக்காரரைக்கொண்டு அவர்கள் ஜீவனத்துக்குவேண்டியவைகளை முன்னுதாக உண்டாக்கிக் கொண்டு பின்பு அவர்களை இதரதொழில்களில் பிரவேசிக்கச்செய்வான். இவ்விதஜீவனத்துக்குவேண்டிய பண்டங்களுக்கே விசேஷகிராக்கியுண்டாகி, கிராக்கியினலே அப்பண்டங்கள் கிரமமாக அடையப் பட்டிருக்கும். கப்பல் கரைதட்டி தப்பிவந்தபேர்களுக்கு பெண்ஜாதிபிள்ளைகள் இருக்குமாயின் அவர்கள் சம்பளங்கள் உயராமல் தங்களையும் தங்கள் பெண்ஜாதி பிள்ளைகளையும் காப்பாற்றசக்தியற்றவர்களா யிருப்பார்கள். இவ்வாறு போதுமான ஆகாரமில்லாவிட்டால் குழந்தைகளில் சில துர்பலமானதுகள் கேவலம் பசியினுலில்லாவிட்டாலும் போதுமான தகுந்த ஆகாரம் கிடையாத்தினுல் நோய்உண்டாகி இறக்கும். ஆகையால் வேலைசெய்கிறவர்கள் தங்கள் சம்பளம் ஒருகுடும்பத்தைக் காப்பாற்றப் போதுமானதா யிருந்தாலொழிய கலியாணம் பண்ணிக் கொள்ளக்கூடாது.

இந்த த்விபாந்திரத்தில் குடியிருப்பவர்கள் வெகுநாள் விசேஷ சவுக்கியத்துடன் வசித்திருந்தபிறகு ஒரு பெரிய சுழல்காத்தடித்துப் பயிரெல்லாம் நாசமாய்முன்வருஷத்திய விளைவிற்பாதி மாத்திரம் விளைந்திருக்குமாயின் வேலைக்காரர்சம்பளம் குறைந்து போய்விடும். எப்படியென்றுல் ஒருவன்தன் கையிலுள்ளமுதலானது தன்வேலைக்காரர்களில்பாதிபேரை மாத்திரம்காப்பாற்றப்போதுமாயிருக்குமாயின்மற்றொருபாதிபேர்களை மனவருத்தத்துடன் தள்ளிப்போடுவான். இந்த எளியமனிதர்கள் வேலைத் தேடிக்கொண்டு அவ்விடம் முழுதும் அலைந்து கொண்டிருப்பார்கள். அப்படியிருக்கையில் வேலையே அகப்படாமல் தங்களைப்போலவே அதேகாரணத்தைப்பற்றி வேலையிழந்துசிரமதசையிலுள்ள பலரைக்காண்கிறுர்கள். இவ்வாறு பிழைப்புக்கு வேறு முகாந்திரமின்றி இவர்கள் தங்கள் பழயஎஜமானர்களிடத்துக்கு மீண்டு குறைந்த கூலிக்காவது வைத்துக்கொள்ளும்படி கேட்பார்கள். இவர்கள் எஜமானர்களும் இவர்களுக்குக் கூலிகொடுக்க சக்தியின்றியே இவர்களைத் தள்ளிவிட்டார்களேயன்றி வேலையில்லாமலல்லவா ! ஆகையால் இவர்களைக்குறைந்த சம்பளத்துக்கு வைத்துக் கொள்ளயாதொரு ஆக்ஷேபமுமிருக்கமாட்டாது. மேலும் வேலைக்காரர் இவ்வளவு சுலபத்தில் அகப்படுவதினுலே முன்தான் நிறுத்தி வைத்துக் கொண்டிருந்த பாதிபேர்களையும் இக்குறைந்த சம்பளத்துக்

குலைத்துக்கொண்டாலொழியவைத்துக்கொள்வதில்லையென்று சொல்வான். அப்பொழுது அவர்களும்விதியின்றிலைத்துக்கொள்ளவேண்டிருக்கும். இவ்வாறு அந்தபிரதேசம் முழுதும் சம்பளங்கள் முன்னிருந்தத் துக்கு பேர்பாதியாகக்குறைந்துபோய்விடும். ஆனால் சாதாரணமாய் எல்லாவிடங்களிலும் சம்பளங்கள் குறைவதற்குப் பதிலாக அதிகரிப்பது சகஜமாச்சுதே இவ்விடத்தில் மாத்திரம் ஏன் அப்படியில்லையென்றால் பணம் உபயோகிக்கப்படும் தேசங்களில் க்ஷாமகாலத்தில் சம்பளங்களைக் குறைப்பது அனுவசியகம். ஏனெனில் கரிப்புகாலங்களில் பண்டங்களின் விலை உயர்ந்திருக்குமாகையால் நிஷ்கரிஷையான சம்பளம் உடைத்தானபேர்களுக்கு வருத்தமாயிருக்கும். ஒருவன்தன் வேலைக்காரனுக்கு உயிர்வாழ்க்கைக்கு வேண்டியபண்டங்கள் முன்னைக்கிப்போது இரட்டிப்புவிலையாக இருக்கச்சேயும் முன்போலவே சம்பளங்கொடுத்து வருவானேயாகில் அவ்வேலைக்காரன் முன்தன்சம்பளத்தைக்கொண்டு பெறத்தக்க பண்டங்களில் இப்போது பாதிதான் பெருவானகையால் உண்மையில் அவன்சம்பளமே அரைவாசியாய் ஆகிவிட்டதென்று கொள்ளலாம். ஆனால் இவ்விதமாகநடத்துவதினால் வேலைக்காரரை மோசஞ் செய்வதாக எண்ணக்கூடாது. முதலைப் படைத்தவர்களுக்கு அம்முதல் குறைந்துவிட்டால் வேலைக்காரர் சங்கியையையாவது அவர்களுடைய சம்பளங்கள் அல்லது அவர்கள் கஷ்டத்துக்கு பதிலாகக் கொடுப்பதை யாவது குறைககவேண்டியது. ஆகையால் வேலைக்காறருக் கெல்லாம் உணவைப் பங்கிட்டுத்தருவது சிலருக்கு விசேஷமாயக் கொடுத்தும் எளையோர்க்கு ஒன்றும் கொடாமல் பட்டினிபோட்டும் கொல்வதைவிட உத்தமமானதல்லவா. க்ஷாமகாலத்தில் பண்டங்களிள் உயர்ந்தவிலைக்குத்தக்கபடி வேலைக்காரர் சம்பளங்களும் உயரவேண்டுமென்று இராஜாங்கத்தில் உத்தரவுபிறப்பித்தால் வேலைக்காரருக்குவிசேஷசுகமுண்டாய் உணவுக்குக்குறைவின்றி யிருக்கமாட்டார்களாவென்பது விளைவுகுறைவாயுள்ளகாலத்தில் கூடவொவ்வொருவனும் அவனுடைய சாதாரண உணவிற்குறையாமல் சாப்பிட்டுக் கொண்டிருக்க வேண்டும் என்பதற்கு ஒப்பாகும். ஏனெனில் பண்டங்கள் விசேஷமாக உத்பத்தியாவதற்குத்தகுந்தமுயர்ச்சி செய்தாலொழியசம்பளங்களை மாத்திரம் உயர்த்துவதால் யாதொருபயனுமிராது. மேலும் ஒரு ரூபாயிக்கு அகப்படத்தகுந்த அரிசியைவிட சம்பளங்களை இறட்டித்தபிறகு ௨ - ரூபாயிக்கு இரட்டிப்புபண்டங்கள் அகப்படுமென்பது சரியல்ல. சம்பளங்கள் உயர பண்டங்களின் விலையும் உயரும். ஆனால் பயிரிடுபவர்கள் அவர்களுடைய தானியத்தினுடையவும் கால்நடைகளினுடையவும் விலைகளை உயர்த்தக்கூடாதென்று உத்திரவுசெய்தால் கசாப்புக்காரர்களும் ரொட்டிவிற்பவர்களும் மாம்சம் ரொட்டி இவைகளின்விலையை உயர்த்தமாட்டார்களென்றும் பயிரிடுவோன் தன்துரதிருஷ்டத்தினால் விளைவுமட்டாய்ப் போனதற்காக விலையை உயர்த்தி நஷ்டத்தை மைத்தபேர்கள்தலையில்போட்டு தன்னைமாத்திரம் மீத்திக்கொள்வது அநியாயமென்றும் ஆக்ஷேபம் தோன்றலாம். பயிரிடுவோன் பண்டங்களை விளைவிப்பதன்றி தானும்அவைகளைப்புசிக்கிறான். புசிப்பதினாலே விலைஉயர்வதினால் உண்டாகும் தீமைகளையும்அனுபவிக்கிறான். சாதாரண விலைக்கு அதிகமாக இரட்டிப்புவிலைக்குத்தான்னியத்தை விற்பானேயானால் அவன்வீட்டில் சாப்பிடுவதின் விலைவழக்கமாய் அவன் உண்பதின் விலையைவிட இரட்டிப்புஅதிகமாயிருக்கும். க்ஷாமகாலத்தில் வழக்கமாய் விளையும் தானியத்தில் அரைவாசிமாத்திரம் உத்பத்தியா யிருக்கையில் விலைகளை உயரவொட்டாமல் செய்வதினால் விளையத்தக்கதைச்சற்றுயோசிப்போம். அப்போதுசம்பளங்களும் விலைகளும் உயராதிருப்பதினால் வேலைக்காரர்கள் வழக்கப்படி பண்டங்களைவாங்கித்தின்பார்கள். அதனால்ஆறுமாசக்கடைசியில் பண்டங்கள் முழுதும் ஆகிப்போயி ஜனங்கள் பட்டினியாயிருக்க வேண்டியிருக்கும். இவ்வாறு முன்னே சிலஅரசர்கள் பண்டங்களின் விலைக்கு ஒரு ஹத்தை ஏற்படுத்துவதற்கு ப்பிரயத்தினப்பட்டு அதனால்பிரமாதமான அளவற்றதீங்குகள்விளைவதைப்பார்த்து விலைகள் நிஷ்கரஷை செய்வதைநிறுத்திவிட்டிருக்கிறார்கள். சஙகடும் ஆண்டில் இங்கிலாண்டில் ஒரு பிரபலமான க்ஷாமம்நேரிட்டு பண்டங்களின்விலை மிகவுயர்ந்து சாதாரண ஜனங்களுக்கு அகப்படுவது துர்லபமாய் போய்விட்டது. அக்காலத்தில் பார்லமெண்டுசபையார் உணவுக்குரிய பண்டங்களுக்கு சிலமிதமான விலைநிஷ்கரிஷைசெய்து அந்தவிலைகளுக்கே விற்கவேண்டுமென்று உத்தரவுசெய்தார்கள். இந்த உத்திரவுபிறந்தபிறகு ஒருசாமானுவதுகடையில் அகப்படுவது வருத்தமாய்விட்டது. இவ்வாறு பார்லமெண்டாருக்கு க்ஷாமகாலத்தில் விலைகள் நிஷ்கரிஷைசெய்தால் கட்டில் நிற்கமாட்டாதென்று தெரியவந்தது.

## நிருபம்.

சமசித்தத்துடன் பிரஜைகளின் நன்மையையேவிரும்பி, சன்மார்க்கத்தின் எல்லையைக்கடந்து நடக்காநின்றமக்களின்பொருட்டு பச்சாத்தாபப்பட்டுஎவ்விதத்திலும்அவர்களை மீண்டும் நன்னெறியில்செலுத்த முயலும் அன்புள்ள தாயெனவிளங்காநின்ற ஓ தத்துவபோதினியே! உனக்கும் உனைப்போற்றும் சோதரர்கட்கும் நன்றியறிதலாக அநந்தவந்தனம் அன்புகூர்ந்தீந்தனன்.

அருமையானதாயே! அடியேன்முன்னொருதரம் கும்பகோணத்துப் பண்டிதர்விஷயமாகச் சிலபிரஸ்தாபங்கள்செய்ததில் உண்மையாகவேயெனக்குண்டாகிய கோபாவேசத்தால் சிலகடினவசனங்களை பிரயோகிக்கநேரிட்டதாயினும், பிறகு அடியேனுக்கே அஃது பொறுமைத்தாழ்வெனத் தோன்றினதுமன்றி நின்னாலும் அறிவூட்டப்பெற்றேனாதலின், இனியவ்வாறு சம்பவியாதிருக்கும்படி என்னால்கூடியவளவு முயல்வேனாதலால் அடியில்கோர்க்கும் வசனபூஷணங்களை அலக்ஷியம்செய்யாது அன்புடன்அணிந்து நின்பிரியமுள்ள பிரஜைகள்யாவரும் கண்டுகளிக்கப் பிரசன்னமாவாயென்று ஆவலுடன் வேண்டிக்கொள்ளுகின்றனன்.

அன்பர்களே! மனுஷியராக எண்ணப்பட்டிருக்கிற வெல்லோருக்கும் வஞ்சனையின்றிக் கல்வீப் பயிற்சிசெய்வித்தலாலும், நிஷ்பக்ஷபாதமான விஷயவிசாரத்தாலும், அவற்றின்மூலமாய் விளையும் படிப்படியான மாறுதல்களாலுமே யன்றி யாதொரு மதாவேசத்தைக்கொண்டாவது, பாமரஜனங்களைமயக்கிப்பிரமிக்கச்செய்யும் தந்திரயுக்திகளைக்கொண்டாவது உலகத்தில் சத்தியம் நிலைநிறுத்தி ஒருமைப் பாட்டையுண்டாக்குதல் அசாத்தியமென்பது யாவருக்கும் தெரிந்தவிஷயமேயல்லவா?

சத்தியமிவ்வா றிருக்க, இதற்குவிரோதமாகவே பூர்வத்தில் சிலர் உண்மைநிலைநிறுத்துவோராக அபிநயித்துசமயாவேசத்தாலும், ஆதாரமற்ற தந்திரயுக்திகளாலும் ஜனங்களை மோசப்படுத்தி தற்புகழ்ச்சியைநாடி பலவித மதங்களையும், ஆசாரங்களையும் ஏற்படுத்திவிட்டு நம்மைஇப்போதிய நிலமைக்குக்கொண்டு வந்துவிட்டதும் தவிறதாமும் மோசப்போனோர்களென்பதை யறியாதவர் வெகு சிலர். இக்காலத்தும் அவ்வாதாரவாக்கியத்துக்கு விரோதமாகவே சிலபிரயத்தனங்கள் இதரசமயத்தாரால் நம்முடையதேசத்தில் நடந்தேரிவருவதைக்கண்டு நாம்வாஸ்தவமாகவே பரிதபிக்கவேண்டியிருக்க நம்மவரிலும் சிலர் அம்முயற்சிகள் சாதுவானவையென்று மதிக்கின்றமையால் அதைக்குறித்து இங்கு கொஞ்சம் பிரஸ்தாபிக்கவந்தவனாயினேன். இஃது ஒருவேளை அடியேன் மனதிற்குமாத்திறந்தான் விரோதமாகப்படுகின்றதோ அல்லது சத்தியகாமசாமாந்நியத்துக்கும் அவ்வாறே தோறறுகின்றதோ என்னும் சந்தேகத்தைநிவர்த்தி செய்துகொள்ளும் பொருட்டு என்கொள்கையை வெளியிடத்துணிந்தனனாகலின் அதில் அபிப்பிராயபேதங்களிருக்கின் கற்றுணர்ந்த சான்றோர் அவற்றைத்திருத்தி உண்மைவெளியிடுவாரெனக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஆதியில் நமதுதேசத்தில் காலதேசவர்த்தமானங்களுக்கிணங்கவும், அவரவரியற்றக்கூடிய கருமங்களை யனுசரித்தும் ஏற்படுத்தப்பட்டதாகிய சதுர்வர்ணங்களில் நூதனமாய் உண்டாயிருக்கிற எண்ணிறந்தஉட்பிரிவுகளைக்கூடியவரையில் நீக்கிஒருமைப்படுத்துவது மேற்படி ஆதாரவாக்கியத்தால் ஆகவேண்டியிருக்க சிலர்ஹேயமான தந்திரங்களாகியகுலபேதமின்றி சம்பந்தஞ்செய்தல் யாதொருமாறுதலை திடீரெனநமதுற்றார்பெற்றார் ஊரார்மனம்நோகும்படி புரியத்துணிதல்என்னும்இவ்விரண்டாலும் அவ்வாறுசெய்யக்கூடுமென்று வாதிக்கின்றனர். அம்முயற்சியானது உண்மையில் பாதகரஹிதமாய் இருக்கச்கூடுமாயினும் பிரகிருதத்தில் பயன் விளைப்பதற்கு ஹேதுவாகாமல் பெரும்பாலும் தீங்கேசம்பவிப்பதற்குக் காரணமாகுமென்று என்புத்திக்குப் படுகின்றது.

அச்சூழ்ச்சியுக்தமென்றுகருதுபவர்தாமே சற்று ஆலோசித்துப்பார்ப்பாராகில் அவ்வாறு ஏகதேசமாயினும் கைக்கூடிவருவது அசாத்தியமென்றும் ஒருவேளை சாத்தியமாயினும் அதினால் நன்மைவிளைவது கடினமென்றும் தெளியக்கூடுமாகிலும் அதைப்பற்றி யிவ்விடத்தில் சற்று விவரித்து விசாரிப்பது தகுதியாமென்று தோன்றுகிறது.

கவது. பூர்வம் நம்முடைய முன்னோர்கள் எல்லோருக்கும் தெய்வபக்தியுண்டாக்கி கதிபெரும்வழியைக் காட்ட வேண்டுமென்னும் தர்மசிந்தையுடன், சில்பகலா நிபுணர்களைக் கொண்டு விசித்திரமான கோயில்களைக்கட்டுவித்தும், அநேகவிக் கிரகங்களைப் பிரதிஷ்டை செய்வித்தும், ஐம்புலன்களும் சுவேச்சையாய் தத்தம்தாகம் தீர்த்துக்கொள்ளும்படி ருச்சியமான உணவுகளையும், புஷ்பசந்தனதுகூலாதிகளையும் நாநாவித வாத்தியங்களையும் தாசிஜனங்களையும் ஆங்கேயமைத்தும் மனுஷியரைத் தமதுமதவலைக்குள் அகப்படுத்தியதுபோல, பெண்மூலமாய்ஒரு

மைப்பாடுண்டாக்க லாமெனக் கருதுவதும் ஓர்தந்திரயுக்தி யாகுமாயினும் அது காமக்கட்டேயொழிய என்னவுண்மைவெளியாக்கி தேசத்துக்கு க்ஷேமம்விளைக்குமோ அறியக்கூடவில்லை. இத்தன்மையான சம்பந்தம்தாசிகளுடன் நமது நாட்டாரில் பலருக்கிருந்தே இருக்கிறதென்பது சகலருக்கும் தெரிந்தவிஷயம். தற்காலத்தில்இந்தயுக்தியைக்கொண்டுஐகமத்தியம் உண்டாக்கமுயல்வதால் சத்தியம் விளங்காது. வியவஸ்தைகள் கேட்டு கெடுதிகள் விளையுமென்று தோற்றுகிறதேயன்றி நற்பயன் விளையுமென்று காணப்படவில்லை.

௨-வது ஆய்ந்தோய்ந் தறியாமையாலோ, சகவாசதோஷத்தாலோ, அல்லதுவேறெந்த காரணத்தாலோ தமது நிலையைவிட்டு பெற்றோர்பதைக்க உற்றோர்பகைக்க, ஊரார்நகைக்க, நடையுடைபாவனைகளைமாற்றிக்கொள்ளத்துணிந்து அந்நியமதத்தில் பிரவேசிக்கிறசிலர், இருவராலும் கைவிடப்பட்டு வேறுகதியின்றி யலைகிறதை நாம்கண்டிருக் கிறோமல்லவா? அப்படியாதொருநவீனமான மாறுதலையோசனையின்றி திடீரென வடையப்புகுதல் அன்னோர் மனதிற்கு யுக்தமாகத்தோன்றினபோதிலும், மற்றவருக்கு அதினால் யாதொரு பயனுமின்றி தீங்கேமேலிடுவது பிரத்தியக்ஷபலனா யிருப்பதுபற்றி அவ்வாறு சொல்லத்துணியாமல் பயனளிக்கத்தக்கவேறுகாரியங்களைச் செய்யமுயல்வாராகில் அது பெருநன்மை விளக்குமென்று தோன்றுகிறது. அதாவது பலபுத்திமான்க ளறிந்திருக்குமாறு வழக்கமென்னும் வியாஜமும் பக்ஷபாதமும் விட்டொழித்து தீர்க்கமாய் விஷய விசாரம்செய்தும், இப்போது நம்மாலாசரிக்கப்படுகிற ஒழுக்கங்களில் உசிதமானவற்றைக் கிரஹித்து நிந்தாஸ்பதமானவற்றைநாளாவட்டத்தில் நிக்கிரஹித்துச்கொண்டும், இன்னும் வேண்டிய நவீனமான ஆசாரங்களை பிறர்மனம் நோகாமல் படிப்படிஅவலம்பித்துக்கொண்டும், பெண் பிள்ளைகட்கு வஞ்சனையின்றி கல்விப்பயிற்றி அவர்களை மிருகத்தன்மையினின்றும் அடிமைத்தனத்தினின்றும் மீட்பித்தும், இன்னும்இப்படிக்கொத்த நன்முயற்சிகளை காலஸ்தானுதிகளையறிந்து செய்துகொண்டும் வருவாராகில் தாமும் பலனடைகிறதுமன்றி தேசமும் க்ஷேமப்பட்டு ஒருமைபாட்டுடன் செழித்தோங்கித்தழைக்குமென்பதில் லேசமாத்திரமும் சந்தேகமில்லை. அன்றியும் பெண்களுக்குக்கல்வியபிவிருத்திசெய்வித்தலேபாலியவிவாகநிவர்த்திக்கும்,புநர்விவாகபிரவர்த்திக்கும்முக்கியகாரணங்களாக இருத்தலின், தற்காலத்தில்பின்னிரண்டற்காகச் செய்யப்படும்முயற்சியைக்காட்டிலும்முன்னதின்பொருட்டுசெய்யப்படும் பிரயத்தனங்கள் பெரும்பாலும் சித்தியளிக்கக்கூடியதாய்தோற்றுகிறபடியால் பின்னிரண்டையும்பற்றிஅவ்வளவாகப்பாராட்டாமல் பாலிகாவித்தியா விருத்தியைக் குறித்தே பிரகிருதத்தில் முயல்வதுயுக்தமாமென்றுநினைக்கிறேன்.

வேதசமாஜத்தாரும் இக்கொள்கையை யனுசரித்தே இதுவரையில் நடந்தவாறு இனியும் சுதேசத்தார்மனம் நோகாமல் உண்மையைவெளியிட்டுக் கொண்டும் காலத்துக்கிசைந்த நன்முயற்சிகள் செய்துகொண்டும் வருவாரென்பதற்கு என்கைக்கெட்டிய அவர்களது முதல் விண்ணப்பமே போந்த நிதர்சனமாயிருக்கின்றமையால், அருட்கடவுளானவர் உள்ளங்கனிந்துபடிப்படியானமாறுதல்களின்மேல்சீருண்டாவதாகிய பெரும்பலனை அளிப்பாரென்பதில் எவ்வளவும் ஐயமில்லையென்று நம்புகிறேன்.

சத்தியம் நிலைபெற்றுஒருமைப்பாடுண்டாவதற்கு மற்றொருவர் சொன்னயுக்தியைப்பற்றியும் விண்ணப்பத்தில் சில அம்சங்களின் மேல் சிலர்கல்பித்த ஆக்ஷேபங்களைப்பற்றியும் மற்றொரு நிருபம்எழுதக்கருதி யிருக்கின்றமையால் அதற்கும் என்னருமைத்தாய் இடங்கொடுப்பாளென வுறுதியாய் நம்பியிருக்கின்றனன்.

ஆகஸ்டுமாதம் ௨௮ம்-தேதி சேலம் } இங்ஙனம் உண்மைவிரும்புவோன்.

---

எனதன்புள்ள தத்துவபோதினித்தாயே !

அடியேன் போனமாதம்– ௨௮-ஆம்தேதி உனக்கனுப்பும் பொருட்டு சில்வசனபூஷணங்களைச் சேகரித்து வைத்திருந்தனன். சமயாதீதமாய் விட்டபடியால் அவற்றைநின் சமுகத்திற் சேர்க்காமல்விட்டேன். ஆகிலும் இப்பொழுது அவைகளுடன்இன்னும் சில அட்சரமுக்தா மாலைசளையும் இணைத்து நின் திருமேனியில் சமர்ப்பிக்க நிச்சயித்திருக்கின்றேன். ஆதலால் அவற்றை நின்போஷகருக்கும் காட்டி பிரீதியுடன் அணிந்து கொண்டு நின்மக்கட்கோர்தர்சனமீவாயெனமிகவும் பிரார்த்தித்துக் கொள்ளுகிறேன்.

தோழர்களே !

முந்தியகடிதத்தில் ஐகமத்திய சித்திக்காக மற்றொருவர் உரைத்தயுக்தியையும், வேதசமாஜமுதல் விண்ணப்பத்தின்மேல்கற்பிக்கப்பட்ட சிலஆக்ஷேபங்களையும் குறித்து பின்

பு பிரஸ்தாபிக்கப்படுமென்பதாகச்சொல்லியிருந்தேனல்லவா ? அவ்வாறு அவற்றை யிப்போது சர்ச்சித்துமுடிக் கவேண்டியது யுக்தமாயினும், அவகாசமில்லாமையால் முதல்யுக்தியின் சுவரூபத்தையும் பொதுவாய் நம்மவரில் பெரும்பாலார் கொண்டிருக்கும் அபிப்பிராயங்களில் சிலவற்றையும் இதனடியில் குறித்துவிட்டு எடுத்துக் கொண்டவிஷயத்தை விசாரித்து பூர்த்திசெய்யும் காரியத்தை மறுநிருபத்தில் வைத்துக் கொள்ளலாமென நினைத்திருக்கிறேன்.

யுக்தியாவது,

மனுஷியனால் முடிக்கக் கூடாத தெய்வீகமான சிலஅற்புதகாரியங்களைப் புரிந்து பிரஜைகளை வசப்படுத்தி ஒருமைப் பாட்டையும் தெய்வபக்தியையும் பரவச்செய்யலாம். இத்தந்திரம் வகித்தேபூர்வம் மதோத்தாரகர்கள் தம்மெண்ணங்களை முடித்துக்கொண்டனர். அத்தகைமையபிரபாவம் வேதசமாஜத்தாருக்கில்லையாகையால் அவர்கள் கொள்கை யீடேறுவது வெகுகடினத்தில் இருக்கின்றது.

எந்தபலனைவிரும்பி இச்சூழ்ச்சி அனுசரிக்கப்படுகிறதோ அதற்கு நேர்விரோதமானபலனேகிடைக்கு மென்பதும், பெருங்கெடுதிகளே விளையுமென்மதும், என்னருமைத்தாயின் திருமுகமண்டலத் திலதமாகிய "ஸத்தியமேவஜயதே, நாந்ருதம்"என்பதின் பலத்தினாலேயே சகலவிதநன்மைகளையும் விளைக்கக் கூடுமென்பதும் அடியேனது கருத்தாகவிருக்கின்றது.

நம்மவரில் சிலருடைய கொள்கைகள்.

ஒருவரது.

க. உலகம் வரவர க்ஷீணிப்பதாலும், யுகதர்மப்படி நடக்கவேண்டுவது சகஜமேயாகையால், "விநாசகாலே விபரீதபுத்தி" என்னுமாப்போல், காலத்திற்குத்தக்கபடி மக்களுக்குபுத்தியும் உண்டாய் வியவஸ்தைகள் கெட்டழியவும், தர்மம் நசிக்கவும், இப்போதுதொடங்கி உற்பாதங்கள் பிறந்துகொண்டிருக்கின்றன.

மற்றொருவர்.

உ. விவாகம் விதிவசமேயன்றி கேவலமனுஷிய பிரயத்தினத்தாலே முடியாது. ஆனதுபற்றியே, தாய்தந்தையர் இவ்வுண்மையுணர்ந்தவராய், சிறுவருக்கு வருத்தமின்றியும், தாம்கண்டு சந்தோஷிக்கும் பொருட்டும் பாலியத்தில் விவாகம்செய்து முடிக்கின்றனர். விதவையாக வேண்டுமென்று விதிபெற்றிருப்பவளுக்குபுநஃ புநஃ மணம்செய்வித்தாலும் அக்கணவரை விழுங்கிவிட்டுதான் முன் நிலையையே அடைவள்.

வேறொருவர்.

௩. அனுபவமேசிறந்த சித்தாந்தம்,புத்திமான்களால்கிரகிக்கப்பட்ட அதனையுக்தியால்வாதித்து நிப்பவர்கள்கற்றறிமோழைகள்.

பின்னொருவர்.

௪. வேதசமாஜத்தார் ஞானகண்டத்தையே பிராதானியமாகக்கொண்டார்போலும், கர்மஞ்செய்து அதின்பலத் தியாகம்பண்ணவராய் ஞானத்தை அவலம்பிக்கவேண்டுமென்று சுருதிஸ்மிருதிகள் முறையிடுவதை அவர்கள் அறியார்போலும்.

மற்றக் கொள்கைகளை இன்னொருநிருபத்தில் வரைந்திட நினைத்திருக்கின்றேன்.

இவ்வபிப்பிராயங்கள் சரியோபிசகோவென்பதை பலரும் அறியும்படி நம்மன்பரில் யாராவது விளங்கக் காட்டுவாரென நம்பி இவ்விடத்தில் குறிக்கலாயினன்.

| | |
|---|---|
| செப்டம்பர் மீ<br>௧அ௨<br>சேலம். | இங்ஙனம்<br>உண்மைவிரும்புவோன். |

## எழுசீர்விருத்தம்.

சீர்வளர் வேதசமாஜத்திற்றோன்றித்
   தேசத்தோ ரகவிருணீக்கும்,
ஏர்வளர் தத்துவபோதினிசார்ந்த
   ரெழிலுறு சமுகத்துச்செய்தி,
பேர்வள ரங்கநாத சாஸ்திரியும்
   பேசும் வெங்கன்ன சாஸ்திரியும்,
நீர்வளர் கன்னிகா மணத்தின்சீர்
   நிகழ்யந்தனை விளம்புதுமே.

ம - ா - ா - ஸ்ரீ.

சென்னைநகர் வேதசமாஜத்தின் தத்துவபோதினி காரிய கர்த்தாவர்கள் சமுகத்துக்கு வந்தனம்.

ஐயா,

தினவர்த்தமானி யென்னும்ஓர்பத்திரிகையில் ம - ா - ா - ரங்கநாதசாஸ்திரியவர்கள்புட்பவதி யானபின், பெண்களுக்குவிவாகம் நடத்தவேண்டியது நியாயமென்று ஸ்தாபிக்கக் கொண்டகருத்தை ம - ா - ா - வெங்கன்ன சாஸ்திரியவர்கள் மறுத்து புட்பவதியாகுமுன்னமே என்றால் எட்டுவயதுக்குள்ளே பெண்களுக்கு விவாகஞ் செய்வதே நியாயமென்றெழுதி இதில் எதுயுக்த

மோஅதை அறிவாளிகள் அனுசரித்து நடந்துகொள்ள வேண்டியதென்று சொல்லியிருக்கிறார்.

இதைப் படித்த, என்மனமானது சாஸ்திரிகளுக்குள்ளாக நேரிட்டதர்க்கத்துக்குஅவர்களாலேயே முடிவை யறியலாமென்றிருந்தது. ஆனால், இதேசங்கதி தங்கள் பத்திரிகையில், தங்கள் அபிப்பிராயக் குறிப்பினையும் சேலத்திலிருந்து நலங்கோருவோன், என்பவர் கடிதத்தாலும் ஷ்ரிரங்கநாதசாஸ்திரியார் கருத்தையே அனுசரித்து பேசியிருக்கிறபடியால் இப்பேர்ப்பட்ட உலகோபகாரமான சங்கதியில் நமதுகருத்தையும் வெளியிடாமலிருப்பது வஞ்சகமாகுமென்று தோன்றுகிறபடியால் அடியில் சிலவரிகளெழுத மனங்கொண்டேன்.

அதாவது.

ஷ்ரிவெங்கன்னசாஸ்திரி யவர்கள் பெண்களுக்கு எட்டுவயதுக்கு முன்பே விவாகஞ் செய்வதற்கு சில ருஷிகள் வாக்கியங்களெழுதியிருந்தாலும் அவ்வாக்கியங்கள் தத்காலஅனுபவத்துக்குச்சரியாகவில்லை.

ரங்கநாதசாஸ்திரியவர்கள், புட்பவதியானபின்பு பெண்களுக்கு விவாகஞ் செய்வதற்கு சிலருஷிகள் வாக்கியங்களெழுதி யிருக்கிறார். அவ்வாக்கியங்கள் தத்கால அனுபவத்துக்குச் சரியாயிருக்கின்றதே.

இப்படி ருஷிகள் வாக்கியங்கள் இரண்டு கட்சிக்கு மிருக்கவேண்டிய தென்னவென்று புத்தியால் ஆராய்ந்து பார்க்குமிடத்தில் உலகத்தில் பொருள்மீதே ஆசையுள்ளவர்களும் பொருளாசையில் மிதமாகவிருப்பவர்களும் இருக்கிறபடியால் இருபக்ஷத் தாருக்கும் உபயோகமாகச் சொல்லியதாய் தெரியவருகின்றது.

அதெப்படியெனில்.

பொருளாசை யுள்ளவர்கள் தனகன்னிகையை, விருதாப்பியனுக்குக் கொடுத்து ஐனூறு ஆயிரம் வாங்கிக்கொள்ளுகிற வழக்கமிருக்கிறபடியால் அப்படிசெய்பவன் தன் கன்னிகைபுட்பவதி யானபின்பு மேற்கண்டபடி கொடுத்து பொருள் வாங்கிக்கொள்ள தன்கன்னிகை சம்மதிக்கமாட்டாளானதால் எட்டுவயதுக்குள்ளாகவானால் தகப்பன்முதலானவர்கள் இஷ்டப்படியாருக்காவது கொடுத்துப் பொருள்சம்பாதித்துக் கொள்ளட்டுமென்றே ஒருபட்சங்கொள்ள வேண்டி யிருக்கிறது.

பொருளாசை மிதமாயுள்ள.

தந்தைமுதலானவர்கள் பெண்ணுக்குவிவேகம்வந்தபின்பு என்றால் புட்பாவதியானபின்பு அவள்கருத்தையும் அனுசரித்து விவாகஞ்செய்துக் கொடுக்கட்டுமென்றே மற்றொருபட்சங்கொள்ளவேண்டி யிருக்கிறது.

ஆனதால்.

ரங்கநாதசாஸ்திரியார் சொல்லிய கருத்துப் பொருளாசை யில்லாத வர்களாயும், கன்னிகைக்குச் சுகங்கோரியவர்களாயும் இராநின்ற வர்களுடைய கருத்துக்கும்அனுபவத்துக்கும், சரியாயிருக்கிறபடியால் வெங்கன்னசாஸ்திரியாரவர்கள் கருத்தை, ஆர், அனுசரிப்பார்கள். ஒருவேளைசிலர்அனுசரித்தால் அவர்களைப் பொருளாசையுள்ளவர்களென்றும், தன்கன்னிகைக்குச் சுகங்கோராதவர்களென்றும், உலகம்பழிக்குமென்பதிற் சந்தேகமில்லை யென்கிற நம்பிக்கையால் இவ்வளவில் நிறுத்தினேன்.

| | |
|---|---|
| கஅசுரு-ம்-ஸ்ரீ ஆகஷ்டுமீ-உருவ பெங்களூர். | இங்ஙனம் நன்மைவிரும்பும் ஆ-ஐயாசாமிமுதலி. |

## மநுநூல்.

எஉ. வலக்கையால், வலதுபாதமும், இடக்கையாலிடது பாதமுமாக, மாறியிருக்கும் கையினாலே குருவின்பாதத்தைப் பிடித்துக் கொள்ளத்தக்கது.

எங. ஆசாரியன் எப்போதும் சோம்பலில்லாதவனும் அத்தியயனம் செய்யப்போகும் சிஷியனைக்குறித்து முதலில் அத்தியயனஞ் செய்யென்று விளித்துச் சொல்லக்கடவன். கடைசியில் குறையிருந்தமட்டும் இருக்கட்டுமென்று நிறுத்தவேண்டும்.

எச. எப்பொழுதும் வேதத்தின் ஆரம்பத்திலும் முடிவிலும் பிரணவத்தைச் சொல்லவேண்டியது. ஓங்கார பூர்வகமாகாவேதமானது நாசத்தை அடைகிறது; கடையில் ஓங்காரத்தைச் சொல்லாதவேதமானது நிலைநிற்கிறதில்லை.

எரு. கிழக்குநுனியான தற்பங்களின்பேரில் உட்கார்ந்தவனாகவும், தர்ப்பைபவித்திரங்களால் பரிசுத்தஞ் செய்யப்பட்டும், மூன்று பிராணாயாமங்களால் பரிசுத்தனாகவுமானபின்பு ஓங்காரத்தை உச்சரிக்கயோக்கியனாகிறான்.

எசு. பிரஜாபதிபிரமன், மூன்று வே

த்திலிருந்து அகாரஉகார மகாரங்களையும்மூன்று வியாஹிருதிகளையும், எடுத்தார்.

௭௭. பிரமன் மூன்றுவேதங்களிலிருந்து ஸாவித்திரியின் மூன்று அடியாக பரத்தையும் எடுத்தார்.

௭௮. சந்தியாகாலங்களில்இந்த பிரணவத்தையும் வியாஹிருதி பூர்வகமான இந்த சாவித்திரியையும் ஜபஞ்செய்யும் வேதவித்தான பிராமணன் வேதாத்தியயனஞ்செய்த புண்ணியத்தை அடைந்தவனாகிறான்.

௭௯. துவிசன் இம்மூன்றையும் கிராமத்துக்குவெளியில் ஆயிரம் ஆவர்த்தி ஜபித்தஉடனே புரையினின்றும் விடுபட்ட பாம்புபோல், அதிகபாபத்திலிருந்து விடப்படுகிறான்.

௮௦. யதாகாலத்தில் இந்தஸாவித்திரியையும் தன்னிட அவுபாஸனாதிகிரியைகளையும் விட்ட பிரம்ம க்ஷத்திரிய வைசியர்கள் சாதுக்களில் நிந்தனையை அடைகிறான்.

௮௧. பலபிரதங்களான ஓங்காரத்தை முன்னிட்டுமூன்று வியாஹிருதிகளும் மூன்றுபத்தையுடைய ஸாவித்திரியும் வேத*த்திற்கு முதலாகச் சொல்லப்படுகிறது.

௮௨. எவன் சோம்பலற்றவனாகி தினந்தோறும் மூன்று வருஷம் இச்சாவித்திரியை அத்தியயனம் செய்கிறானோ, அவன்பிரம்மமூர் † த்தியாய் வாயுவைப்போலே காமசாரியாய் பிரம்மபத மடைகிறான்.

௮௩. பிரணவமான பரப்பிரம்மஸ்வரூபம்பிராணாயாமங்கள் யெல்லாத்தபஸுகளுக்கும் சிரேஷ்டங்கள்;ஸாவித்திரியைவிட வேறு மந்திரமில்லை; மவுனத்தைவிட உண்மை விசேஷப்படுகிறது.

௮௪. வேதவிஹிதங்களான யெல்லா கிரியைகளும் நாசமடைகின்றன. பிரணவமானது பிரஜைகளுக்கு அதிபதியான கடவுளைப்போலநாசமில்லாமற் பரப்பி*ரம்மமாகவே யிருக்கிறது.

௮௫. விதித்த தர்சபவுர்ணமாசாதியக்கியத்தைவிட,பிரணவாதிகளின் ஜபயக்கியம், பத்துமடங்கு அதிகமானது. உபாம்சு அதை இதரன் செவிபடாமற் மெள்ள சொல்லுதல், நூறுமடங்கு அதிகம்; இதைவிட மானஸஜபம் ஆயிரமடங்குஅதிகம்.

௮௬. குருவினுடைய பாதத்தைப்பிடிக்கும்போது, மாறினகையினால் பிடிக்கவேண்டியது, (அதாவது) வலதுகையால் வலதுகால் தொடப் படவேண்டியது. இடதுகையினால் இடதுகால்.

௮௭. ஓதப்போகிற மாணாக்களைப்பார்த்து குருவானவன் எப்போதும் சோம்பலில்லாதவனாய், "நீர்ஓதுக" என்று சொல்லவேண்டியது, முடிவில்ஓதுவதையொழிக, என்று சொல்லவேண்டியது.

௮௮. பிராம்மணனா யிருப்பவன் ஓதத் தொடங்கும்போதும், முடிக்கும்போதும், பிரணவத்தைச் சொல்லவேண்டியது. முதலில் பிரணவத்தைச் சொல்லாவிட்டால், ஓதியவேதம் நழுகிப்போம், முடிவில் சொல்லாவிட்டால், வேதம் அழிந்துபோம்.

௮௯. தர்ப்பைகளைக் கிழித்து நுனியாகப்பரப்பி, அவற்றின்மேல உட்கார்ந்துகொண்டு, பவித்திரங்களால் சுத்திசெய்யப்பட்டவனாய், மூன்று பிராணாயாமங்களாலே பரிசுத்தனாய், அதன்பின்பு ஓங்காரத்தைச் சொல்லத்தகுந்தவனாகிறான்.

௯௦. பிரம்மாவானவர், மூன்றுவேதத்தினின்றும், அகார, உகார,மகாரங்களையும், ஹ்ரீம்,ஹ்வம்,ஸ்வம்இவைகளையும் சாரமாகஎடுத்தார்.

௯௧. உயர்ந்தபதத் திலிருப்பவராய்,

* பரபிரம்மாஎன்கிறதற்குபிரம்மபாதகமென்று உரை அல்லதுபரபிரும்மபிராப்த்தி சாதனமென்றுவது.

† பிரம்மமென்னுஞ் சொல்லுக்கு கடவுளர்த்தமாகுங்கால், மோக்ஷத்திற்கு சாதனமாகவென்றும் உரையிட்டிருக்கிறது.

* வஉ-ஒதி-ூஸாநுஎன்ற பதத் திற்கு ஆகாசம் போல் வியாபகனாகி என்றும்அர்த்தமாகலாம்,

பிரம்மாவானவர், மூன்றுவேதங்களினின்றுமே,

இந்த சாவித்திரினுடைய வொவ்வொருபாதத்தையும் எடுத்தார்.

௯௨. மேற்சொல்லிய எழுத்தையும் ஓம்பூ:, ஓம்புவ:, ஓம்ஸுவ:, என்னும்வியாகிருதிகளை முன்னிட்ட,சாவித்திரியையும், இரண்டுசந்திகளிலும் ஜபஞ்செய்கிற வேதமறிந்த விப்பிரன் வேதத்தையோதினபுண்ணியத்தோடு சேர்க்கப்படுகிறான்.

௯௩. இருபிறப்பாளனா யிருப்பவன், (ஓங்காரம், வியாகிருதி,ஸாவித்திரி.ஆகிய) மூன்றையும், ஊருக்குவெளியிற்சென்று, ஆயிரமுறை ஜபஞ்செய்வானாயின், சர்பமானது தன்தோலினின்றும் விடப்படுதல்போல், அதிகமாயிருந்தாலும் தன்னுடைய தீவினையினின்றும், ஒருமாசத்தில் விடப்படுகிறான்.

௯௪. இந்த இருக்கோடும் (சந்தியா) காலத்தில்தான் செய்யவேண்டிய சடங்கோடும் கூடாதவனாய்,பிராம்மண,க்ஷத்திரிய, வைசியஜன்ம மெடுத்தவன், நல்லோருக்குள் இகழ்சியடைகிறான்.

௯௫. ஓங்காரத்தை முன்னிட்டவராய், அழிவில்லாதவனாயிருக்கிற மூன்றுவியாகிருதிகளும், மூன்றடிகளையுடைய ஸாவித்திரியும், பிரம்மாவுக்கு முகமாக நினைக்கப்படுகின்றன.

௯௬. எவன், சோம்பலில்லாதவனாய் இதைநாள்தப்பாமல், மூன்றுவருஷம் ஜபஞ்செய்கிறானோ, அவன், பரப்பிரம்மத்திற்கெதிர் செல்லுகிறான். வாயுவாகிறான் (வாயுவைப் போல்நினைத்தவிடம் செல்லவல்லவனாகிறான் என்றபடி) பிரமமே வடிவமாகிறான்.

௯௭. (பிரணவமாகிய)ஒற்றை எழுத்தானது பரப்பிரம்மம்; பிராணாயமங்களே சிறந்ததவம்; ஸாவித்திரியினுஞ் சிறந்தது ஒன்றுமில்லை; ஒன்றும் பேசாமல் வாயை மூடிக் கொண்டிருத்தலைவிட, உண்மையைப்பேசுதல் சிறந்தது.

௯௮. வேதத்திற்சொல்லிய, ஹோமம், யாகம் முதலியகிரியைகளெல்லாம் அழிவன. அழியாமலிருப்பது; (ஓங்காரமாகிய)அழியாப் பொருளொன்றே. ஏனெனில், அது பிரஜைகளுக் கெல்லாம் தலைவனாகிய, பிரம்மம்.

௯௯. விதிக்கப்பட்டிருக்கிற வேள்வியினும், ஜபஞ்செய்தலாகிய வேள்வியானது பத்துபங்கு உயர்ந்தது. பிறர்கேளாமல், ஜபித்தல் நூறுபங்கு உயர்ந்தது. (நாவுதடுகள் அசையாமல், மனத்துக் குள்ளேயே சபஞ்செய்தல், ஆயிரமடங்கு உயர்ந்தது.

௧௦௦. பாகயக்கியங்கள் நான்கும், விதியக்கியங்களும்கூடினாலும், அவைகளெல்லாம் ஜபயக்கியத்தினுடைய பதினாறிலொருபங்குக்குத் தகுந்தவையல்ல.

௧௦௧. பிராமணனானவன், ஜபத்தினாலேயே சித்தியையடைவன். இதில்சந்தேகமில்லை. மற்றதைச்செய்தாலுஞ் செய்யட்டும்; செய்யாமற்போனாலும் போகட்டும். (உயிர்களுக்கெல்லாம்) நண்பனாயிருப்பவன் பிராம்மணன் என்று சொல்லப்படுகிற படியினாலே,

௧௦௨. அறிவுடை யோன், கவர்கின்றவைகளாகிய விஷயங்களில் செல்கின்ற பொறிகளை யடக்குவதில், குதிரைகளை நிறுத்துவதில், பாகனைப்போல் முயிற்சிசெய்வான்.

௧௦௩. மதிமான்களாகிய முன்னோர்கள், எவைகளைப்பதினொரு இந்திரியங்களென்று சொன்னார்களோ, அவைகளை, உள்ளப்படி, முறைபிறழாமல், செம்மையாய்ச்சொல்லுகிறேன்.

௧௦௪. (அவைகளாவன)செவி, மெய், இரண்டுகண்கள், நா.(இந்நான்கின் பின்) ஐந்தாவதாகிய மூக்கு, பாயு, உபஸ்தம், கை, கால், (இவ்வொன்பதின் பின்) வாக்கானது பத்தாவதாகநினைக்கப்பட்டிருக்கிறது.

௧௦௫. இவைகளுக்குள்,முறையேசெவிமுதலாகச் சொல்லப்பட்டிருக்கிற ஐந்தும் புத்திந்திரியங்கள், பாயுமுதலாகிய ஐந்தும் கன்மேந்திரியங்களென்று செ

ல்லப்படுகின்றன.

க0சு. மனஸ்ஸானதுபகிறோராவதாகஅறியக்கடவது. அது தன்னுடையதன்மையினாலேயே இருவகையாயிருப்பது. எது வெல்லப்பட்டபோது,முற்கூறிய ஐம்பொறிக்கூட்டங்களிரண்டும் வெல்லப்பட்டனவோ.

க0எ. இந்திரியங்களுடைய பற்றினால், சந்தேகமில்லாமல் குற்றமடைகிறான். அவைகளையே யடக்குவதினாலே, சித்தியடைகிறான்.

க0அ. விருப்பமானது, விரும்பப்பட்டவைகளின் அனுபவத்தினால், எப்போதும் ஆறுகிறதில்லை. நெய்யினால் நெருப்புப்போல், மேலுமேம்வளர்ந்துகொண்டேவரும்.

க0கூ. எவன்இவைகளெல்லாவற்றையும் (பெறுகிறானோ, எவன் இவைகளை அடியோடே விட்டுவிடுகிறானோ (அவர்களுள் விடுபவனே யுயர்ந்தவன்) அதனால்)விரும்பப்பட்ட வைகளையெல்லாம் பெறுதலை விடவிடுதலே மேலாகிறது.

கக0. விஷயங்களில், செம்மையாகப்பற்றி யிருக்கிற இந்திரியங்களானவைகள் நாளுக்குநாள் அறிவினாலே (அடச்கப்படுதல்)எப்படியோஅப்படி, முழுத்துறவினால் அடக்கப்படமாட்டா.

ககக. குற்றமுள்ள கருத்தையுடையவனுக்கு, வேதமோதுதலும்கொடையும் வேள்விகளும், நியமங்களும், தவங்களும் எப்போதும் சித்தியைத் தரமாட்டா.

ககஉ. எந்த மனிதன் (இன்பந்தருவன, துன்பந்தருவன இரண்டையும்)கேட்டும், தொட்டும், உண்டும், மோந்தும் பார்த்தும், இன்பத்தையும் துன்பத்தையும் அடையாதிருக்கிறானோ அவன், பொறிகளை வென்றவனாக அறியப்படக்சடவன்.

ககங. எல்லாஇந்திரியங்களுக்குள்ளும் ஒன்று நகிழினும்அதனாலேஇவனுடைய அறிவும் நகிழும். தோற்பையுள்ளிருக்கிற நீரானது துளையினின்றும்போல்.

ககச. இந்திரியங்களுடைய கூட்டத்தை வயப்படுத்திக்கொண்டு, மனத்தையும் அடக்கிக்கொண்டு, யோகத்தினால், உடம்பை வருத்தாமலே, புருஷார்த் தங்களெல்லாவற்றையும் சாதிக்கலாம்.

ககரு. காலையில் சூரியன் தெரிகிறவரைக்கும்,காயத்தரியைஜபஞ்செய்துகொண்டிருக்கவேண்டியது. மாலையில்நட்சத்திரங்கள் தெரிகிறவரையில் ஜபஞ்செய்துகொண்டிருக்கவேண்டியது.

ககசு. காலையில்ஜபஞ்செய்துகொண்டிருப்பவன், (அதற்குமுன்) இரவிற்செய்ததீவினையைப் போக்குகிறான். மாலையில் ஜபஞ்செய்தவன் (அன்று) பகலிற்செய்த தீவினையை அழிக்கிறான்.

ககஎ. எவன் காலையில்ஜபஞ்செய்யாமலிருக்கிறானோ, எவன், மாலையில்ஜபஞ்செய்யாமலிருக்கிறானோ, அவன்சூத்திரனைப்போலே, பிராம்மணகருமமெல்லாவற்றினின்றும், நீக்கக்கடவன்.

ககஅ. (மனிதரில்லாத) காட்டில், நீர்க்கரையிற் சென்று இந்திரியங்களை யடக்கிகொண்டு, மனத்தைவயப்படுத்திக்கொண்டு, நித்தியகருமத்தைச் செய்வதுமல்லாமல், காயத்திரியையும் ஜபஞ்செய்யக்கடவன்.

கககூ. வேதாங்கத்தின் விஷயத்திலும், நாள் தப்பாமல் ஓதவேண்டிய வேதத்தின் விஷயத்திலும், பாடமோதா நாளில் தடையில்லை. ஓமஞ்செய்யவேண்டிய மந்திரங்களின்விஷயத்திலும் (அப்படியே.)

கஉ0. நித்தியமாகிய கருமத்தில்அனத்திய யனதோஷங்கிடையாது. அதுபிரம்ம யக்கியமென்றுநினைக்கப்பட்டிருக்கிறது. வேதத்தில் சொல்லியமந்திரங்களால் செய்யப்பட்டஓமமும்(சிலநாள்களில்) அத்கிய்யனஞ் செய்க்கூடாத வஷ்டகாரங்களால் செய்யப்பட்ட போதிலும் நன்மையையேதரும்.

கஉக. எவன் ஒருவருஷம் விதிப்படி, இடைவிடாமல், சுத்தனாயிருந்துகொண்டு வேதத்தையோதுகிறானோ அவனுக்கு அது, பால், தயிர், நெய், தேன், இவைகளைத் தினந்தோறும் கொடுக்கிறது.

கஉஉ. உபநயனஞ்செய்யப்பெற்றஇ ருபிறப்பாளனானவன், தீவினைக்காக வேண்டிய சமித்துக்களைக் கொண்டுவருதலையும், உணவுக்காக பிட்சையெடுத்து வருதலையும், தாழ்ந்தபடுக்கையிற் படுத்தலையும், குருவுக்கு இதமானதைச் செய்வதையும், ஸமாவர்த்தனம் வரைக்கும் நடத்திக்கொண்டு வரவேண்டியது.

கஉங. குருவின்மகன், தனக்குப் பணிவிடைசெய்பவன் (மற்றொருவிஷயத்தில் தனக்கு) ஞானத்தைக் கொடுப்பவன், தருமஞ்செய்பவன், சுத்தனாயிருப்பவன், நண்பன், வல்லவன், பொருள்கொடுப்பவன், சாதுவாயிருப்பவன், தனக்கு பந்துவா யிருப்பவன், இப்பதின்மரும், வேத மோதுவிக்கத்தகுந்தவர்கள்.

கஉச. ஒருவனாலே வினவப் படாமலிருக்க, அவனுக்குச் சொல்லக்கூடாது, நியாயத்தைத்தப்பிக் கேட்பவனுக்கும்(அப்படியே) புத்திமானாயிருப்பவன்தான் அறிந்தவனாயிருந்தாலும், அறியாதவன்போலேயே, உலகத்தில் நடக்கவேண்டியது.

கஉரு. எவன் தருமத்துக்கு ஒவ்வாமல் வினவுகிறானோ, எவன் தருமத்துக்கு விரோதமாகச் சொல்லுகிறானோ, அவ்விருவருள் ஒருவன் இறப்பான், அல்லது பகையையாவது அடைவன்.

கஉசா. எவனிடத்தில் அறமும்பொருளும்இல்லையோ, அப்படிப்பட்ட பணிவிடையாவதுஇல்லையோ அவன்விஷயத்தில் வித்தியைசொல்விக்கக்கூடாது,(அது)களர்நிலத்தில், உயர்ந்த விதையை விதைத்ததுபோல்(வீணாய்ப்போம்.)

கஉஎ. வேதமறிந்தவனால், வித்தியையோடேகூட, சாகத்தக்கது. கடுந்துன்பம் நேரிட்டகாலத்திலும், அதைஊஷர நிலத்தில் விதைக்கக்கூடாது.

கஉஅ. கல்விதேவதையானது,பிராமணனிடத்தில்வந்து சொல்லியது, "நான் உனக்கு நிதியாகிறேன், நீயென்னைக்காப்பாற்று அஸூயையுடையவனுக்குஎன்னைக்கொடாதிக, அப்படியேசிறந்தவீரியத்தையுடையவளாவேன்."

கஉகூ. எவனை, சுத்தனாயும், பொறிகளையடக்கினவனாயும், பிரம்மசாரியாயும்அறிவாயோ, அப்படிப்பட்டவனாய், (கல்வியாகிய) நிதியைக்காக்கத்தக்கவனாய், பிரமாதஞ்செய்யாதவனான, பிராமணனுக்கு என்னைச்சொல்.

கங0. எவன், சொல்விப் பவனிடத்திலிருந்து, அவனுடையஅனுமதியில்லாமல வேதத்தை யறிகிறானோ, அவன் வேதத்தைத் திருடின குற்றத்தோடு கூடினவனாய், நரகத்தையடைகிறான்.

கஙக. உலகத்தைச்சேர்ந்த தாகட்டும், வேதத்தைச் சேர்ந்த தாகட்டும், ஆத்துமாவைச் சேர்ந்த தாகட்டும், ஞானத்தை யெவனிடத்தினின்றும் பெறுகிறோமோ, அவனை முன்னதாக, வந்தனஞ்செய்யவேண்டியது.

கஙஉ. காயத்திரிமாத்திரம் அறிந்தவனாயிருந்தபோதிலும், பொறிகளை யடக்கிய பிராமணன் சிறந்தவன். மூன்றுவேதங்களையறிந்தவனாயிருந்தபோதிலும்,பொறிகளை யடக்காதவனாயும், எல்லாவற்றையும் தின்பவனாயும், எல்லாவற்றையும் விற்பவனாயும் இருப்பவன் சிறந்தவனல்ல.

கஙங. தனக்குஉயர்ந்தவன் இருக்கிற ஆஸனத்திலேயும் படுக் கையிலேயும், உட்காரகூடாது. தான்படிக்கையிலாவது,ஆஸனத்திலாவது இருந்தாலும், சிறந்தவன் வரும்போது, அவனையெழுந்து வந்தனஞ்செய்யவேண்டியது.

கஙச. முதிர்ந்த வயதுள்ளவன் (தனக்கு)எதிரெவரும்போது இளையவனுடைய பிராணன்கள் மேலெழும்புகின்றன. எழுந்து வந்தனஞ் செய்வதினால், அவைகளை மறுபடியும் அடைகிறான்.

கஙரு. தினந்தோறும், வந்தனஞ்செய்வதே வேலையாயும், பெரியோர்களுக்குச்சேவைசெய்பவனாயு மிருப்பவனுக்கு, ஆயுஸ்ஸும், கல்வியும், புகழும், வலிமையும் நான்கும் விருத்தியடைகின்றன.

கஙசா. "அபிவாதயே" என்றுசொல்லியபின்பு, பிராமணனாயிருப்பவன் பெரியவனைப்பார்த்து, "நான்இந்தப்பெயரையுடையவன்"என்று தன்னுடைய பேரைச்சொல்லவேண்டியது.

## விவேகவிளக்கம்.

### ௲அ௱௫௰௫ ஜூலைமாசம்.

“சென்றமாதத்துப்பத்திரிகையிற் சொல்லியபடி, வேதசமாஜகண்டனத்தின் பதிமூன்றாம் விடையாகிய பெண்கல்விமறுத்தலுக்குச் சமானமாய் இப்போது சிலசொல்லத்தொடங்குகிறோம்.

கண்டகருடைய அபிப்பிராயத்தைமுன்னதாகத் தெரிவித்துப் பின்புஅதற்கு நாம்சொல்லுகிற சமாதானத்தை யெழுதுகிறோம்? அவர் சொல்லியது ; பெண்கள் ஆண்பிள்ளைகளைவிட பொறாமை, கபடம் முதலிய தீக்குணங்களில் அதிகமான வர்களென்றெண்ணி மனுவானவர், அவர்கள் வேதமோதக் கூடாதென்று மறுத்திருக்கிறாரென்றும், மற்றொரு இருஷியானவர் ஆண்பிள்ளைகளுக் குப்போலே பெண்பிள்ளைகளுக்கு அந்நப்பிராசனம், வித்தியாப்பியாசம் முதலியவை தகாதனவென்று விலக்கி யிருக்கிற படியினாலே பெரியோாகள் பெண்களுக்குக் கல்விகற்பியாமையால் வைத்துக் கொண்டு வந்தார்களென்றும் ; திருவாய்மொழி முதலான தமிழ்நூல்கள், பெண்கள்பிரம்மஞானத்தையடைவதற்காக எழுதப் பட்டிருந்தாலும் அவைகளைப் பெண்கள் (ஆண்பிள்ளைகளும்)குருவழியாகக் கேட்டறிய வேண்டியதேயன்றித், தாங்களேபடித்துக் கொள்ளக் கூடாதென்றும்; பெண்கள் கல்விகற்பதுதிருவள்ளுவருக்குக் கருத்தல்லவென்றும், ஔவை, உறுவை, கோதை இவர்கள் தெய்வப் பிறப்பினராதலால், அவர்களைத் திருஷ்டாந்தமாகக்கொண்டு நம்முடைய பெண்கள், கல்வி கற்கக் கூடாதென்றும்; முத்துச் சிப்பியில் விழுந்தால் முத்தாகிறமழையே, பாம்பின் வாயில்விழுந்தால் விஷமாவதுபோல, மற்றெல்லாருக்கும் நன்மையைத்தருகிறகல்வியானது, பெண்களுக்குமட்டும் தீமையைத் தருமென்றும் சொல்லியிருக்கிறார்.

இனி இவைகளுக்குமுறையே சமாதானஞ்சொல்லுகிறோம். ஆனால் இந்த ஆக்ஷேபங்களுள், சில, இதுவரையில் வழக்கமாய்ச் சொல்லிக் கொண்டுவருகிற ஆக்ஷேபங்களேயாதலாலும், சிலவற்றிற்கு நம்முனையை முன்பதிப்புகளிலேயே சமாதானஞ் சொல்லியிருக்கிறோமாதலாலும்,இங்கேவிரித்துப்பேசாமல் விஷயங்களைச் சுருக்கிவிடுகிறோம்.

முதலில், பெண்கள் வேதம் படிக்கக் கூடாதென்று மனுநூலில் விதித்திருக்கலாம். அது வேதத்திலேயும் மறுத் திருக்கலாம். “பெண்களும் சூத்திரருமல்லாதவர் வேதமோதுக”என்று பொருள் தருவதாய்ஒருவாக்கியமிருக்கிறது. அதுவேதவாக்கியமோ, அல்லது ஸ்மிருதியிலிருப்பதோ இப்போது நினைவிற்குவரவில்லை. ஆனால் இதனால்பெண்கள் கல்வியே கற்கக் கூடாதென்பது யேற்படமாட்டாது. பலவித கல்விகளுள் ஒன்றாகிய வேதத்தை ஓதக்கூடாதென்று மறுத்தவளவினாலேயே, மற்றக் கல்விகளையுங்கற்கக்கூடாதென்பது, சித்தமாகமாட்டாது. அவற்றைக் கற்கலாமென்பதே மனுவினுடைய கருத்தென்றுநமக்குத் தோன்றுகின்றது. ஒருவனைப்பார்த்து நீமாங்கனிதின்னக்கூடாதென்று மறுத்தால், அவன் அதுதவிர மற்றவற்றைத் தின்னலாமென்பது பொருளாகுமேயன்றி, கனியையே தின்னக்கூடாதென்று சொல்வதாகாது. துறவிகளும் கைம்பெண்களு மல்லாதவர்கள் தித்திப்பாகிய பண்டம் தின்னலாமென்றால் அவ்விஷயம் தித்திப்பானபண்ட மாத்திரம் தின்னக் கூடாதென்று பொருளாகுமேயன்றி, ஒன்றும் தின்னாமல் பட்டினியாக விருக்கவேண்டுமென்பது பொருளாகாது. அப்படிதான் மேற்கண்டவாக்கியத்தின் விஷயத்திலும், “பெண்களும் சூத்திரருமல்லாதவர்கள் வேதத்தை ஓதலாம்” என்பதினால் அவ்விருவரும் வேதந்தவிர மற்றவற்றைப் படிக்கலாமென்பதே யுக்திக் கேற்றபொருள். ஆகையால் இது பெண்கள் படிக்கலாமென்பதற்குப் பிரமாணமாகுமேயன்றிக், கூடாதென்பதற்கு உதவியாகாது.

பெரியோர்களும் நாம்கொண்டகருத்தையே கொண்டதாகத் தோன்றுகிறது. எப்படியெனில், மேல்வாக்கியத்தில் “சூத்திரருமல்லாதவர்” என்று சூத்திரரையும் விலக்கியிருக்கிறது. சூத்திரர்கள் வேதந்தவிர மற்றக்கல்விகளைக் கற்றுக்கொண்டு வருகிறார்களேயன்றி அடியோடே கற்றறியாமூடர்களாய் நின்றுவிடவில்லை. அப்படி யிருக்கப் பெண்கள் விஷயத்தில்மாத்திரம், வேறுவகையான பொருள்கொள்ளுதல் நியாயநூலுக்குஒத்ததன்று. பெண்களையும்சூத்திரரையும் ஒன்றாகச்சேர்த்து விலக்கியிருக்கிற வாக்கியத்தில், பெண்களுக்கு ஒருவிதமாயும் சூத்திரருக்கு மற்றொருவிதமாயும் பொருள் கொள்ளுதல் தப்பென்று சற்றறியாக்குழவிகளும் சொல்வாாகள்.

பொண்களுக்கு, அந்நப்பிராசன முதலியவை செய்யத்தகாவென மறுத்த விஷயத்திலும் கண்டகர்கொண்ட கருத்துக்குற்றமாகவே காண்கிறது. அவைகளை மறுத்திருப்பது உண்மைதான். ஆனால் வித்தியாப்பியாஸஞ் செய்யக்கூடாதென்பதற்கு, கல்வியே கற்க்க்கூடாதென்பதுபொருளாகாது. ஆண்

பிள்ளைகளுக்கு எப்படி மந்திரங்களோடும், விதியோடும் செய்கிறார்களோ அப்படி பெண்பிள்ளைகளுக்குக் கூடாதென்று கருத்துக் கொள்ளவேண்டியது. மற்றச்சடங்குகளுக்கெல்லாம் இப்படியே நடந்துகொண்டுவருகிறது. ஒருதொழிலையே பிராமணன்செய்தால் மந்திரமோதிச்செய்கிறான்; சூத்திரன் செய்தால் மந்திரமில்லாமற்செய்கிறான்;மேற்கண்ட விலக்கைச் செம்மையாய் ஆராய்ந்தால் இதுநன்றாய் விளங்கும். அதில் அந்நப்பிராசனம் வித்தியாப்பியாசம் இரண்டையும் விலக்கியிருக்கிறது. இரண்டாவதைவிலக்கினதனால் கல்வியே கற்கக்கூடாதென்றால், முதலதனை விலக்கியிருப்பதனால் சோறுண்ணுதலையே மறுக்கவேண்டிவரும். அந்நப்பிராசனத்தை மறுத்த.வாக்கியத்திற்கு விதிவத்தாய்க்கூடாது. ஆனால் அன்னமுண்ணலாம் என்றுதுணிந்து பெண்கள் சோறுண்டுகொண்டு வருகிறார்களல்லவா ? அப்படியே வித்தியாபியாசத்தை மறுத்தவாக்கியத்துக்கும், அதனோடு முரணாமற்பொருள்செய்து பெண்களுக்குச் சல்விகற்பிக்கவேண்டியது. பெண்கள் அடியோடே, உண்டியையே மறுத்து என்றும் பட்டினியா யிருக்கவொப்பினால், அவாகளுக்கு கல்வி சற்பிப்பதையும் மேற்கண்ட வாக்கியததைக்கொண்டு நிறுத்திவிடலாம்.

திருவாய்மொழி திருவாசகம் முதலான பிரபந்தங்களைக்குறித்து, இநதக்கட்சியினால் பெண்களுக்கு மோட்சமுண்டென்பதைநம்முடைய கண்டகர் ஒப்புக்கொண்ட தாயிற்று. இந்தஉலகத்தில் கல்விகற்பதனால் உண்டாகிறமேன்மை அவர்களுக்குக்கூடாதென்று மறுத்தாலும், மறுமையிலாவது அவர்களுக்கு, அழியாவின்ப முண்டாகலாமென்று கண்டகர் ஒப்புக்கொண்டதைக்குறித்து நாம் மிகச்சந்தோஷப் படுகிறோம். இதைப்படிக்கிரபெண்பிள்ளைகளும் கண்டகரிடத்திலும் நன்றி யறிவுள்ளவர்களா யிருப்பார்களென்று நம்புகிறோம். இதுநிற்க, கல்விக்கு முதன்மையான பயன், கற்போராத்துமா சீர்ப்படுதல் ஆத்மா சீர்ப்படுதலுக்குத்தலைமையான பயன்முத்தி ஆகையினால், இவற்றுள் மனிதன் பெறவேண்டுவது முத்தி. இதற்கு உபாயமாகத் தான், தன்னுடைய ஆத்துமாவை, அவன்சீர்ப்படுத்திக்கொள்ள முயலுகிறான். ஆத்துமா சீர்ப்படுத லில்லாமல்முத்திவரும்போலே யிருந்தால், அவன், அதை நினைக்கவேமாட்டானென்பதற்குச் சந்தேகமில்லை. அப்படியே ஆத்துமாசீர்ப்படுதலுக்குக் கல்விஉபாயமாயிருக்கிறது. கல்வியினுதவி யில்லாமலே ஆத்துமாசுத்தியையடையுமானால் கல்வி வேண்டியதேயில்லையென்று நாமேசொல்லுகிறோம். அப்படியடைவதுமாத்திரம் அருமையாகத் தோன்றுகிறது. ஆனால் கண்டகருக்கு இதுஎளிதென்கிற கருத்திருக்கிறதாகத் தெரியவருகிறது. எப்படியெனில், முத்திக்குமுந்திய காரணமாகிய பிரம்மஞானத்தையுண்டாக்குவனவாகிய பிரபந்தாதிகளைப் பெண்கள், பிதாமுதலியோர்களின் வழியாய்க்கேட்கவேண்டுமென்றார். அந்தப்பாட்டுகளின்பொருளை யறியவேண்டியதோ, அந்தச் சொற்கள், ஆடுமாடுமுதலியவற்றின் காதில்விழுந்து அவைகளுக்கு யாதொரு பொருளும் உணர்த்தாமற் போவதுபோல், அவர்கள் காதிலேயும் விழுந்து பொருளுணர்ச்சி யில்லாமற்போகவேண்டுமோ வென்றால், பொருளுணர்ச்சி யுண்டாகவேண்டுமென்றே சொல்வர். அஃதுண்டாவதற்கு, அந்தப்பாட்டுகள் எந்தப்பாஷையிலெழுதப் பட்டிருக்கின்றனவோ, அந்தப்பாஷையின், இலக்கணங்களும், அதில் சிலஇலக்கியங்களும் தப்பாமல்அவர்களுக்குத் தெரிந்திருக்கவேண்டியது. இவைகள் முன்னதாய்த் தெரிந்திராவிட்டால் திருவாய்மொழியிலாகட்டும், தேவாரம் திருவாசகங்களிலாகட்டும் யாதொருபாட்டிற்கும் பொருளகப்பட மாட்டாதே யெனில், அவ்விலக்கணவிலக்கியங்களைமுன்னதாய்ப், பிதாமுதலியோர் மூலமாய்த் (தாங்கள் படியாமல்) அறிந்துகொள்ள வேண்டுமென்பார். ஆகையால், இவருடைய கொள்கையெல்லாங்கூடி, எழுதப்பட்டநூல்களைப் பார்த்துப் பெண்கள் படிக்கக்கூடாதேயன்றி, விஷயங்களெல்லாவற்றையும் கேள்வியினாலறியலாம் என்பதாயிற்று. அவ்வளவே போதும். நம்முடைய கருத்துப் பெண்களுக்கு நல்லறிவு உண்டாக வேண்டுமென்பதேயன்றி, அது சண்ணினால் புத்தகங்களைப் பார்த்துப்படித்து அந்த வொருஉபாயத்தினாலேயே அவ்வறிவு உண்டாக வேண்டுமென்கிற பிடிப்பில்லை. அவர்கள படித்தறிந்தாலும், கேட்டறிந்தாலும்நமக்குச்சிந்தையில்லை. ஆண்பிள்ளையாயிருப்பவனை எழுத்தறிகிற பருவத்துக்கு முன்பே, குருடாய்விட்டாலும், அவன்கேள்வியினாலே, கல்வியறிவை யடைந்தால் அவனை வித்துவானல்லவென்று தள்ளிவிடலாமோ? கண்ணினால்காணக்கூடுமான வெழுத்துக்களைக்கொண்டு விஷயங்களை யறிந்தவர்கள், காதுக்குவிஷயமான சொற்களால் அறிவடைந்தவரினும்சிறந்தவரென்று சொல்வதற்குஇடமில்லை; இந்தப்படியிலேயே பெண்களும்வருகிறார்கள்:

நாம்வருகிறவழி வராவிட்டால், பெண்களுக்குத் திருவாய்மொழி முதலியவற்றைக் கிளிமுதலியவற்றைப் போலேயு மாகாமல்,

குருவொன்றுசொல்லத்தாம் மற்றொன்றாக
த்தப்புப்பாடஞ்செய்தமாத்திரத்தினாலேயே
ஆத்துமா சுத்தியடைந்து, முத்திக்கேது உ
ண்டாகிற தென்றேப்புக்கொள்ள வேண்டி
யது. இவ்வள்வு எளிதில்முத்தி உண்டானா
ல்அதுபெண்கள்செய்தஅதிருஷ்டமென்றுநி
னைக்கவேண்டியது. ஆனால் அதுஉண்டாவ
துமாத்திரம் கண்டகருடையசொற்களாலே
யேசந்தேகத்துக்கிடமாய்விட்டது. அவர்,
முத்திக்கு முதற்பகைகளான, பொறாமை
முதலான திக்குணங்கள் ஆண்களினும் பெ
ண்களிடத்தில் அதிகமாயிருப் பனவென்று
சொல்லியிருக்கிறார். இக்குணங்களைக்கொ
ஞ்சமாக உடையஆண்கள், அனேகதவஞ்செ
ய்து, அனேகநூல்களைக்கற்று, வருத்தப்பட்
டு முத்திபெறுதல் அருமையாயிருக்கப் பெ
ண்கள் தப்பும்தாறுமாய்க், கேட்பவர் வெ
றுப்புறச் சிலமொழிகளைப் பிதற்றுவதினா
லேயே முத்தியடைவாரென்றெப்படிச்சொ
ல்லலாம். அப்படியே யடைவார்களென்று
அவர்உறுதியாய்ச் சொல்லுமிடத்து, மனித
ருக்குப் பொறாமைமுதலிய துர்க்குணங்கள்
எவ்வளவு அதிகமாகிறதோ அவ்வளவும்முத்
தி யடைதல் எளிதாமென்று கொள்ளவே
ண்டிவருகிறது. இக்குணங்கள் பெண்களி
டத்தில் அதிகமென்று நாம்கொண்டபடி ய
ன்று; கண்டகர், முதலில் பெண்களுக்குக்
கெட்டகுணங்க ளதிகமென்று சொல்லிவி
ட்டுப் பின்புஅவர்கள், பொருளை யறியாமல்
சிலமொழிகளை வாயினால்சொன்ன மாத்திர
த்திலே அவர்களுக்கு மோட்ச முண்டாமெ
ன்று கருத்துப்படச்சொல்லியது முன்பின்
முரணாயிருக்கிறதென்பது கருத்து. இத்த
மிழ்நூல்களை யவர்கள் படிக்கவுங் கூடாது
வாயினாற்சொல்லவுங்கூடாது கேட்டமாத்
திரத்திலேயே முத்தியுண்டாமென்றால் இதி
ல்நாம் முன்சொல்லியகுற்றம்இருமடங்காக
ச்சேருமாதலால், தனித்துஆட்சேபஞ் செய்
யவேண்டியதில்லை.

## தமிழ்பாஷையின் சரித்திரம்.

(௨௪-ம்பக்கத்திலிருந்து தொடர்ச்சி.)

முதலாவது;—அவைகள் இவ்வளவு பழ
மையென்று சொல்லக்கூடாது. தமிழிற்கு
முதனூலாசாரியராகிய அகஸ்தியர், ஸம்ஸ்கி
ருதத்தில் "ஆதிகாவியம்"என்று பெயர்பெ
யர்பெற்ற இராமாயணம் எழுதினகாலத்தி
ல் இருந்தவராகத் தெரியவருகிறது. மற்றப்
பாஷைகளுக்கு அவ்வளவு பூர்வீகரான நூ
லாசிரியரைக்காணோம். தெலுங்குக்குப் பி
ரதான கவிகளாய் "கவித்திரயம்" என்கிற
பொது விருதையடைந்த நந்நயபட்டர், எர்
ரன்னமாத்யர், திக்கின்னஸோமயாஜி, இ
வர்கள் சிலநாளுக்குமுன் இராஜமஹேந்திர
முலியதெலுங்குபட்டணங்களில் ஆண்டுகொ
ண்டிருந்த இராஜாக்களிடத்தில் ஆஸ்தானக
விகளா யிருந்தவர்கள். மேலும் தமிழில்
ஆதி நூல்களாகிய சிந்தாமணிமுதலி யன
சைனர்களால் எழுதப்பட் டிருக்கின்றன.
சைனர்கள் இத்தேசத்தில் பெருமையாய்
வாழ்ந்தகாலம் நெடுநாளுக்கு முன்னென்
பதற்குச்சந்தேகமில்லை. குறைந்ததுஆயிரம்
வருஷத்துக்கு முன்னிருந்தவர்களாகிய ஸ
ம்பந்தமூர்த்திஸ்வாமிகள், திருமங்கையாழ்
வார், இவர்களுடைய நூல்களிலும், இன்னு
ம் அவர்கட்கு முற்பட்டவர்களுடைய நூல்
களிலும், சைனரைக்குறித்துச் சொல்லியி
ருப்பதைக்காணும்போது இது தெளிவாகத்
தெரியலாம். இவ்வளவேன்? ஆதிகவிகளு
ள் ஒருவராகிய திருவள்ளுவரை, சைனர் த
ங்களுடைய மதஸ்தர்என்றும், சைவவைஷ்
ணவர்கள் தங்களுடைய மதஸ்தர்என்றும்,
போராடுவதே சைனர்களுடையகாலம் ம
ஹாபழமையான தென்பதற்குப் போதுமா
ன அத்தாக்ஷியாயிருக்கிறது. அவ்வளவு ப
ழமையானவர்களுள் தமிழ்ப்பண்டிதரிருந்த
மையால் தமிழ் நெடுங்காலமாய் வழங்குகி
றதென்பதற்குக் காரணமிருக்கிறது.

தெலுங்குக்குக் கணுவரென்கிற ருஷிசூத்
திரஞ் செய்திருக்கிறாரென்றும், அச்சூத்திர
ங்கள் இக்காலத்தில், சிலநூல்களில், உதார
ணங்களாக எடுத்துக்காட்டப் பட்டிருக்கின்
றனவென்றும் சிலபண்டிதர்கள் சொல்லுகி
றார்கள். இதுஉண்மையாயிருந்தால் தமிழி
ற்குண்டான பெருமை தெலுங்குக்கும் உ
ண்டாகும். ஆனால் உண்மையாகக் கொள்
வதில்மாத்திரம் சிறிது வருத்தமிருக்கிறது.
முதலில் இது, தொன்றுதொட்டு, வித்துவா
ன்கள் வழியாய் வந்துகொண்டிருக்கிற க
தை யன்று. இரண்டாவது இதைச் சிலவித்
துவான்கள் ஒத்துக் கொள்ளுகிறார்கள். சில
ர்கண்ணுவசூத்திரம் என்பதே யிருந்ததில்லை
யென்கிறார்கள். மூன்றாவது இதுஉண்மை
யாயிருந்தால், இக்காலத்து வித்துவான்களு
க்குமாத் திரமேயன்றி,இவர்களுக்கு இருநூ
றுமுந்நூறு வருஷங்களுக்குமுன்,தெலுங்கு
பாஷை செழித்தோங்கிய காலங்களிலிருந்
த ஆந்திரகவிகளுக்குத் தெரிந்திருக்கவேண்
டியது. அவர்கள் செய்த நூல்களுள் அனே
கங்களில் தம்முற்கவிகளைத் துதிசெய்திருக்
கிறது. அத்துதிகளுள் அவசியமில்லாமல்வ
டநூற்கவிகளையெல்லாம் துதிசெய்திருக்க,
கண்ணுவர் என்னும்பெயரை யவைகளிற்கா
ணோம்.

## விளம்பரம்.

ஸ்ரீராமாயணத்தில் சில சில சுலோகங்களில் பதந்தோரும் -ய- அ-விதமான விசேஷரஹஸியார்த்தங்களை காண்பித்து, சுருதி ஸ்மிருதி இதிஹாஸங்களையும், ஆழ்வார் அருள்ச்செயலான பாசுரங்களையும், உதகரித்து செய்திருந்த தநிசுலோகி என்கிற மணிப்பிரவாள வியாக்கியானமானது, தி - குணுக்கரம்பாக்கம் வித்துவான் கோபாலாசாரியரால் தமிழிலும், கிரந்தத்திலும் மணிப்பிரவாளமாய் அச்சிட்டிருக்கிறது. அந்த புஸ்தகம்-க இ - நூ கஉ. தெலுங்குலிபியில் அச்சுபுஸ்தத்ம் - க- இ - நூ. க. தபால்கூலி - அஜ உ; இந்த புஸ்தகம் விலையில்லாத மாணிக்கத்தோடே ஒப்புச்சொல்லலாயிருக்கும். இந்தவிலை கடுதாசுகிரயமும், அச்சுக்கூலியும், சேர்ந்த தொகையென்று அறியவும். இது வேண்டியவர்கள் மைலாப்பூரில் தத்துவபோதினி அச்சுக்கூடத்திலும், திருவல்லிக்கேணி மேலண்டை வீதியில் உயஅ - வது கதவிலக்கமுடைய கிரஹத்தி லிருக்கும் மேற்சொல்லிய கோபாலாசாரியரிடத்திலும், எழுதிக்கொள்ளவும்.

## சந்தாதாரர் விளம்பரம்.

தத்துவபோதினிக்குக் கையொப்பம்செய்பவர்கள் அனுப்பும்தொகைச் சேர்ந்ததைக்குறித்து, உத்தரப் பிரத்யுத்தரங்கள் வைத்துக்கொள்ள அநுகூலப்படவில்லை யாகையால், அந்தந்த மாதத்தில் வரும் கையொப்பங்களைக் குறித்து, மருமாதம் தத்துவபோதினியில் ஒரு அட்டவணைப் பிரசுரம் செய்யப்படும். கடந்த மாதத்தில் வந்த சந்தாதாரர்களுக்கு அட்டவணை வருமாறு.

### சந்தாதாரர்களுடைய அட்டவணை.

| | |
|---|---|
| சென்னை, ஆதிமூலமுதலியார்... ... ... | க |
| ,, ம-ஜெயராமபிள்ளை... ...... | க |
| ,, சேஷாசாரியார் - பி - ஏ.... | க |
| ,, லால்கடி, வைதியநாதையர். | க |
| ,, ஏ-கிருஷ்ணசாமிமுதலியார்... | க |
| தஞ்சைநகர், கிருஷ்ணசாமி அய்யர்... ... | க |
| ,, சிதம்பரபிள்ளை............ | க |
| ,, ராமசந்திர விஜய அருணாசல வணங்காமுடி பண்டாரத்தார்......... ... ...... | க |
| ,, சுப்பராயர்...... ...... ... | க |
| நாகபட்டணம், கண்டபல்லி வெங்கிட ,, பாலகிருஷ்ணசெட்டியார் | க |
| கல்லியாணபுரம்- ஸ்ரீனிவாசஐயங்கார். | க |

## குறிப்பு.

இந்தமுறைச்சில அனிவாரியமான அசந்தர்ப்பத்தால் பத்திரிகை காலத்தில் வெளியாகக்கூடாமற் போனதைப் பற்றி மன்னிக்கக்கோருகிறோம்.

தனியான, ஒப்பற்ற, மெய்யறிவநந்த பிரும்மம், சாந்திபூர்ணம், அமிருதம், அதுஉருவும்குற்றமுமற்றது. இதையறிந்தவர் அமிருதராவார்; மற்றவர் துக்கமேய்டைவார்.

மெய்யேவெல்லும், பொய்யல்ல.

சென்னப்பட்டணம்,—தத்துவபோதினி அச்சுக்கூடத்தில், கா. தெய்வசிகாமணி முதலியாரால் பதிப்பிக்கப்பட்டது.